Koviloor Digital Library

பிள்ளையார் சுழி

‘ சாவேரி ’

KVC0605

கார்த்திகேயினி பிரசுரம்
ராமச்சந்திரபுரம்
புதுக்கோட்டை ஸ்டேட்

Koviloor Digital Library

FIRST EDITION — MARCH 1947

Price Rs. 2

All Rights Reserved
with the Author.

Printed at the Chandravilas Pinjrapole Press, Trichinopoly.
for Karthikaeyini Prachuram, Ramachandrapuram
Pudukottai State P. D. 24—Copies 1000

Koviloor Digital Library

உள்ளுறை

Koviloor Digital Library

Koviloor Digital Library

சமர்ப்பணம்

ராஜரிஷிக்கு

Koviloor Digital Library

பதிப்புரை

திரு. சாவேரி அவர்கள் எழுதிய கவிதை விளக்கங்களின் முதல் தொகுதி இது—பிள்ளையார் சுழி.

தமிழ் இலக்கியத்தில் எத்தனையோ அதி அற்புதமான கவிதைகள் உண்டு. ஆங்கிலமே அதிகமாகப் படித்ததன் பயனாகத் தமிழைப் புறக்கணிக்க நேர்ந்தது குறித்து வருந்துவோருக்கும், தமிழ்ப்படிக்கவேண்டும் என்று விரும்புகிற ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர்களுக்கும், தமிழ்க் கவிதைதான் எப்படி இருக்கிறது என்று பார்ப்போமே என நினைக்கிற ஆராய்ச்சியாளருக்கும் இந்தத் தொகுதி மிகச் சிறந்த துணையாக உதவும்.

இதன்கண், முப்பத்தைந்து விளக்கங்கள் உள்ளன. யாவரும் அறிந்து உணரும் வண்ணம் எளிய இனிய நடையில் எழுதப்பட்டுள்ளன. ஒருமுறை படிக்கும்பொழுதே பாடலின் பொருள் விளங்கக்கூடிய முறையில் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன. ஆசிரியரின் ரசிகத்தன்மையும் அறிவாற்றலும் நுட்பமான ஆராய்ச்சியும் இந்த நூலை ஒளிபெறச் செய்கின்றன.

Koviloor Digital Library

இப்புத்தகத்திற்கு அட்டைப்படம் எழுதிய நண்பர் 'மூர்த்தி' அவர்களுக்கும், அச்சிலும் கட்டுக்கோப்பிலும் விசேஷ கவனம் செலுத்திய அச்சகத்திற்கும் எங்கள் நன்றி உரியது.

கார்த்திகேயினி பிரசுரம்,
ராமச்சந்திரபுரம்.
9—3—47

பதிப்பாசிரியர்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பிள்ளையார் சுழி

தமிழராகிய நாம், எந்தக் காரியத்தையும் பிள்ளையார் துதியுடன்தான் துவங்குகிறோம்.

நம்முடைய கோவில்களில், முதல் முதல் அந்த ஐந்தகரத்து விநாயகருக்குப் பூஜை ஆகி விட்டுத்தான் பிறகு மூலவருக்குக்கூடத் தீபாரா தனை ஆகிறது.

நம்முடைய இலக்கிய ஆசிரியர்கள் எல்லாரும் காப்புச் செய்யுளில் விநாயகரைத் துதித்துவிட்டுத் தான் நூலைப் பாட ஆரம்பித்தார்கள்.

திருமூலராகிய மஹா ஞானிகூடத் தாம் பெற்ற இன்பத்தை இந்த வையகம் பெறவேண்டும் என்று கருதி மெய்ப்பொருளை அருளும்போதும்,

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே!

என்று விநாயகரைப் பரவுகிறார்.

நம்முடைய தினசரி வாழ்வில் விநாயகர் 'பிள்ளையார் மாதிரி' அசைக்கமுடியாதபடி உட்

Koviloor Digital Library

கார்ந்துகொண்டு விட்டார்! நமக்கும் அசைக்க முடியாத ஒரு பக்தி அவரிடம் ஏற்பட்டுவிட்டது!

தொல்காப்பியம் நமக்கு அறிமுகம் செய்து வைக்கிற

தடந்தாட் கொத்த தமனியச் சிலம்பு
படந்தாழ் கச்சைப் பாம்பொடு மிளிர
வென்றுடு திருத்தாதை வியந்துகைத் துடிகொட்ட
நின்றுடு மழுகளிற்றை நினைவாரே வினையிலரே.

என்றபடி அந்த அருமையான 'நின்றுடும்' நடனத்தை, நமது வாழ்வு என்ற அரங்கிலே தினந்தினம் ஆடுகிறுர் விநாயகர். அவர் நம்முடைய சொந்த தெய்வம். எனவே, வீட்டில் நடக்கிற பூஜைகளில் எல்லாம் விக்நேச்வரர் அருகம்புல்லில் நின்று காட்சி தருகிறுர். எதை எழுதினலும் - காவியத்திலிருந்து கடிதம் வரை - அவருடைய சுழியை எழுதிவிட்டுத்தான் மேலே விஷயத்துக்கு வருவது என்பது, பல ஆண்டுகளாக நம்முடைய பண்பாட்டிலே ஊறிவிட்ட ஒரு அருமையான வழிபாடு.

சப்தம், ச்பரிசம், ரூபம், ரஸம், கந்தம ஆகிய ஐந்தினுள் சப்தமே முதலில் தோன்றிற்று என்றும், 'ஓம்' என்ற பிரணவ நாதத்திலிருந்துதான் இந்த அகிலாண்டகோடியெல்லாம் உண்டாயின என்றும்

Koviloor Digital Library

ஞானிகள் கூறுவர். இந்த 'ஓம்' என்ற பிரண வத்தின் வடிவந்தான் பிள்ளையார் சுழி.

பிரணவமானது பதினாறு உறுப்புக்களின் குறிப்பு என்றும், இந்தப் பதினாறு உறுப்புக்களா வன அ, உ, ம, அர்த்தம், நாதம், விந்து, கலை, கலா தீதை, சாந்தி, சாந்தியாதீதை, உன்மணி, மனோன் மணி, புரி, மத்தியமை, பசியந்தி, பரை ஆகியவை என்றும், அகரம் பிரமனையும் உகரம் விஷ்ணுவை யும், மகரம் அரனையும் உணர்த்தும் என்றும், இன் னும் பல விதமாகவும், இதன் பொருளை ஞானிகள் விளக்குவார்கள். உபநிஷதம் உள்ளிட்ட சகல நூல்களும் இப் பிரணவ மந்திரத்தின் மகிமையை வானளாவப் புகழும். தமிழர் இந்த மகிமை நிறைந்த பிரணவத்தைத் தங்கள் செயலுக்கெல் லாம் ஆதியாக வைத்தது அவர்களுடைய ஞானத் துக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

தமிழ்மொழி தழைக்கவும் தமிழர் நலமுறவும் தமிழ்நாட்டின் புகழ் ஓங்கவும் காரணராயிருந்த பல புலவர்களில் எல்லாருக்கும் எக்காலத்துக்கும் பொதுவாக நின்று நிலவும் ஔவையார், விநாய கரைத் தோத்தரித்துள்ள விதம் அருமையானது.

வீட்டுத் தெய்வமாக வைத்துச் சொந்தம் பாராட்டி, விநாயகருக்குப் பாலும், தேனும், பாகும் பருப்பும் ஆகிய நான்குமக கலந்து தினந்தோறும்

Koviloor Digital Library

பூஜை செய்வாராம் அவர். எதற்காக? முத்தமிழ் தரவேண்டுமாம் விநாயகர்.

எப்படி வியாபாரம்?

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும், இவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

ஒளவையார் தம்முடைய தமிழ்ப்பணிக்கு எவ்வளவு விநயபூர்வமாகப் பிள்ளையார் சுழி போடுகிறார் பாருங்கள். தமிழ் இலக்கியத்திலேயே அதி அற்புதமான ஒரு பாடலாக விளங்குகிறது இந்தப் பிள்ளையார் சுழி!

Koviloor Digital Library

ஒரு பழைய ஹாஸ்யம்

தெருவில் பெரிய சண்டை. ஒரே கூக்குரல். பெண்களுடைய சத்தம்தான் எல்லாம்.

மோர் விற்றுக்கொண்டு போனவள் ஒரு கட்சி; தெருவிலே இருக்கிற அத்தனை வீட்டுப் பெண்களும் கூடி மறு கட்சி!

எத்தனையோ நூறு ஆண்டுகளாக இந்த யுத்தம் நடக்கிறது. இன்னும், சண்டை தீர்ந்த பாடில்லை!

காரணம் என்ன? தயிரில் அளவுக்கு மீறி தண்ணீர் கலந்துவிட்டாளாம் மோர்க்காரி.

அடிக்கடி நாம் பார்க்கிற இந்தத் தெருக் காட்சியை மனத்தில் வைத்துக்கொண்டு ஒரு பழைய பாடலைப் பார்க்கலாம்.

வானத்தைப் பார்த்து, அதில் ஓடுகின்ற மேகத்தைப் பார்த்துப் பாடுவதாகச் செய்யுளின் சாயல்.

கார் என்று பேர் படைத்தாய்
    ககனத்து உறும்போது

Koviloor Digital Library

கார் - மேகம். ககனம் - ஆகாயம். உறும்போது - தங்கும்போது; ஒடும்போது.

கார்என்று பேர்படைத்தாய்
ககனத்து உறும்போது

ஆகாயத்திலே இருக்கும்போது, ஏ மேகமே, உனக்குக் 'கார்' என்று பெயர்.

நீர் என்று பேர் படைத்தாய்
நீள் நிலத்தில் வந்ததன் பின்

இந்தப் பரந்த பூமிக்கு வந்தபிறகு உனக்கு என்ன பெயர்? நீர் - தண்ணீர்.

கார்என்று பேர் படைத்தாய்
ககனத்து உறும்போது
நீர்என்று பேர்படைத்தாய்
நீள்நிலத்தில் வந்ததன்பின்

இனித்தான் மூன்ருவது பெயர் வரப்போகிறது.

வார்ஒன்று மென்முலையர்
ஆய்ச்சியர்கை வந்ததன்பின்

இந்த ஆய்ச்சியர்ப் பெண்களுடைய கைக்கு வந்ததும்,

Koviloor Digital Library

மோர் என்று பேர்படைத்தாய்

வானத்திலே இருந்தாய்; உனக்கு மேகம் என்று பெயர். பூமிக்கு வந்தாய் உனக்குத் தண்ணீர் என்று பெயர். இந்த ஆய்ச்சியருடைய கைக்கு வந்தாய்; உன்னுடைய பெயர் 'மோர்' என்று ஆகிவிட்டது!

கார்என்று பேர்படைத்தாய்
 ககனத்து உறும்போது
நீர்என்று பேர்படைத்தாய்
 நீள்நிலத்தில் வந்ததன்பின்
வார்ஒன்று மென்முலையார்
 ஆய்ச்சியர்கை வந்ததன்பின்
மோர்என்று பேர்படைத்தாய்
 முப்பேரும் பெற்றுயே.

என்பதுதான் பாடல்.

மோர் ஒரே தண்ணீராய் இருக்கிறது என்பது தான் விஷயம். இந்த விஷயம் சாமான்யம். ஆனல் இதைச் சொல்லுகிற விதம் இருக்கிறதே அது பிரமாதம். அடடா, மூன்று பெயர் அல்லவா 'படைத்துள்ளாய்' என்று சொல்வது பாட்டின் எக்காளத்திற்கு அபாரமான வேகம் கொடுக்கிறது.

தமிழனுடைய ஒரு பழைய ஹாஸ்யம்!

Koviloor Digital Library

கவிக் கூத்து

திருமலைராயன் என்ற ஒரு பழைய சிற்றரசன். அவனுடைய சமஸ்தான வித்வான்களை ஒருநாள் காளமேகப் புலவர் சந்திக்கிறார். "ஐயா நீங்கள் எல்லாம் யார்" என்று கேட்கிறார்.

"பார்த்தால் தெரியவில்லையா, நாங்கள் எல்லாம் கவிராயர்கள்" என்று கொஞ்சம் இறுமாப்புடனேயே பதில் சொல்லுகிறார்கள் புலவர்கள் - யாருடன் பேசுகிறோம் என்று தெரியாமல்.

கவி ராயர் என்று சொன்னார்கள் அல்லவா. காளமேகத்துக்குப் பிடி கிடைத்துவிட்டது! கவி என்றால் குரங்கு என்று ஒரு அர்த்தம் உண்டல்லவா. காளமேகப் புலவருடைய கையிலே வால் அகப்பட்டுக்கொண்டது. ஒரு ஆட்டு ஆட்டுகிறார்!

வாலெங்கே? நீண்ட
வயிறெங்கே

வாலையும் காணோம்; நீண்ட வயிற்றையும் காணோம்- கவிராயர் என்கிறீர்களே.

வாலெங்கே நீண்ட
வயிறெங்கே முன்னிரண்டு

Koviloor Digital Library

காலெங்கே உட்குழிந்த
கண்ணெங்கே?

குழிவிழுந்த கண் உண்டே கவி என்ருல், அது எங்கே ஐயா?

—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள்! நீவிர்
கவிராயர் என்றிருந்தக் கால்.

நீங்கள் கவிராயர் என்பது உண்மையானல் இத்தனை 'வைபவங்'களும் உண்டுமே, எங்கே காணேம் என்று, முதுகுக்குப் பின்னல்போய் வாலேத் தேடுகிருர். பிறகு, முன்னல் வந்து நின்று ஏற இறங்கப் பார்க்கிருர் காளமேகப் புலவர்!

வாலெங்கே நீண்ட
வயிறெங்கே முன்னிரண்டு
காலெங்கே உட்குழிந்த
கண்ணெங்கே - சாலப்
புவிராயர் போற்றும்
புலவீர்காள் நீவிர்
கவிராயர் என்றிருந்தக்
கால்.

எப்படி இந்தக் கூவிக்கூத்து!

Koviloor Digital Library

தத்தா தித்தீ துத்தூ தொத்தோ

தமிழில் வல்லெழுத்துக்கள் என்பன க் ச் ட் த் ப் ற் என்னும் ஆறும் ஆகும். இந்த ஆறில் ஒவ்வொன்றும் உயிர் எழுத்தோடு சேரும்போது எழுபத்திரண்டு ஆகும்.

'த்' என்ற எழுத்து த, தா, தி, தீ, து, தூ, தெ, தே, தை, தொ, தோ, தௌ என்று பன்னிரண்டாகும். இந்தப் பன்னிரண்டில் த, தா, தி, தீ, து, தூ, தொ, தோ, என்ற எட்டு எழுத்துக்களையும் 'த்' என்ற எழுத்தையும் வைத்துக்கொண்டு, ஒரு வேடிக்கை செய்திருக்கிற வெண்பாவைப் பார்க்கலாமா?

தாதிதூ தோதீது
  தத்தைதூ தோதாது
தூதிதூ தொத்திதத்
  தூததே - தாதொத்த
துத்திதத் தாதே
  துதித்துத்தேத் தொத்தீது
தித்திதத் தோதித்
  திதி.

Koviloor Digital Library

ஒரே 'தத்தை தாதை' என்று நட்டுவனர் சொற்கட்டுபோல ஒலிக்கிறதல்லவா. இது ஒரு விளையாட்டு. பிரமாதமான கவிதை என்று தலையிலே வைத்துக்கொண்டு கூத்தாடவேண்டாம்; சும்மா வேடிக்கை நன்ருயிருக்கிறதே என்று அனுபவிக்கலாம்.

எப்படி?

காதலி சொல்கிருள்:

, தாதிதூ தோதீது.

தாதி என்ருல் தோழி. 'தோழி போய்த் தூது சொன்னுல் தீதுதான் - கெடுதிதான் - நேரும், எனவே தாதியினுடைய தூதோ (தாதிதூதோ) தீதானது (தீது).

தாதிதூ தோதீது
தத்தைதூ தோதாது.

தத்தை - கிளிப்பிள்ளை.

தத்தைதூ தோதாது.

கிளிப்பிள்ளையோ என்ருல், இந்தத் தூதைப் போய்ச் சொல்லாது. தத்தை தூது ஓதாது. ஓதாது - சொல்லாது.

Koviloor Digital Library

தாதிதூ தோதிது
தத்தைதூ தோதாது.

சரி; இனி?

தூதிதூ தொத்திதத் தூததே

தூதி - ஏ தூது சொல்பவளே (தூது சொல்வதையே தொழிலாகக் கொண்டவள் தூதி; தூதனுக்குப் பெண்பால்)

தூதிதூ தொத்திதத் தூததே.

தூதியே உன்னுடைய தூது, ஒத்திதத் தூததே.

ஒத்திதத் தூததே

என்றால், மனத்துக்கு ஒத்த தூதாகும்.

தாதியினுடைய தூது தீதானது. தத்தை - கிளிப்பிள்ளை - யோ தூது சொல்லாது. ஏ தூதியே உன்னுடைய தூதானது ஒத்திதத் தூது (மனத்துக்கு ஒத்த தூதாகும்)

தாதிதூ தோதிது
தத்தைதூ தோதாது
தூதிதூ தொத்திதத்
தூததே—

Koviloor Digital Library

ஆகையால், உன்னுடைய தூதே மனத்துக்கு ஒத்த தூதாக இருப்பதனுல்,

—தாதொத்த

துத்தி தத்தாதே

தாதொத்த - (தாது ஒத்த) பொன்னை ஒத்த - பொன்னைப்போன்ற

துத்தி தத்தாதே

துத்தி என்ருல் தேமல். பொன்னிறமான தேமல் என்னுடைய உடம்பில் தத்தாமல் (பற்ருமல்)

—தாதொத்த

துத்திதத் தாதே

காதலினுல் என் உடம்பில் தேமல் தத்துகிறது. இது தத்தாத வண்ணம் :

துதித்து

அவரை - காதலரைத் - துதிசெய்து

தேத்து

அவர் மனத்தை நீ தேற்று.

ஒத்து ஈது

தித்தித்தது.

Koviloor Digital Library

இந்தக் காரியம் என் மனத்துக்கு ஒப்பாகி (ஒத்து) மிகவும் தித்திப்புத் தந்தது.

ஒதி
இதைச் சொல்லி

திதி
என்னைக் காப்பாற்று.

இனிப் பாட்டை ஒரு முறை முழுதும் படித்துப் பார்க்கலாமா?

தாதிதூ தோதிது
  தத்தைதூ தோதாது
தூதிதூ தொத்திதத்
  தூததே - தாதொத்த
துத்திதத் தாதே
  துதித்துத்தேத் தொத்தீது
தித்தித்த தோதித்
  திதி.

இதை வைத்துக்கொண்டு ஆட்களைக் கொஞ்சம் மருட்டலாம்!

Koviloor Digital Library

கல்போன்ற மலர்!

போதி மரத்தடியில் புத்தர் நிஷ்டையில் இருக்கிறார்.

இரவு பகல் என்றில்லாமல் ஒரே நிஷ்டை!

மாரன் என்று ஒரு தேவன்; நற் செயல்களுக்கெல்லாம் சத்ரு. அவனுடைய மனம் இந்த நிஷ்டையை எப்படிச் சம்மதிக்கும்? புத்தருக்கு ஞானம் சித்திக்கக்கூடாது என்று தன்னுடைய மகளிரான காமம், மோகம் முதலானவருடன் படையெடுத்து வந்து பலவகையான இடையூறுகளைச் செய்கிறான். ஆனால் புத்தரிடம் இந்த முயற்சி ஒன்றும் பலிக்கவில்லை. போரில் புத்தர் வெற்றி பெற்று ஞானத்தை அடைந்து விடுகிறார். இது காரணமாக "மாரஜித்" என்றே அவருக்குப் பெயர் ஏற்பட்டுவிடுகிறது.

மேலே கண்ட கதையில் ஒரு அருமையான உருவகம் இருக்கிறது. போதிமரத்தின் அடியில் அமர்ந்து தியானத்தில் லயித்திருக்கும் மனம், சாதாரண இச்சைகளை எதிர்க்கக்கூடிய பலத்தைப் பெற்றிருக்க வேண்டும். புத்தர் இந்த பலத்தைப் பெற்றிருந்தார். எனவே வென்றார்.

இதை மனத்தில் வைத்துக்கொண்டு ஒரு பழம் பாடலைப் பார்க்கலாம்.

Koviloor Digital Library

போதி மரத்தினடியில் தியானத்தில் இருக்கிருனே சித்தார்த்தன், இவனுடைய மனம் எப்படிப்பட்டது? துன்பத்தைக் கண்டும் மக்களின் வறுமையைக் கண்டும் தாங்கமாட்டாத மெல்லிய மனது என்று உலகவர் சொல்வார்கள். உண்மையில், அவனுடைய துறவுக்குக் காரணமே மனத்தின் அந்த மென்மைதானே. ஆனுல், அந்த மெல்லிய மனத்தை மாரன் மகளிருடைய கண்கள் என்கிற கூர்மையான வாள் அத்தனையும் சேர்ந்து எள்ளளவுகூடப் பிளக்க முடியவில்லையே! அப்படியானுல் அந்த மனத்தை மெல்லியது என்று சொல்வது எப்படி?

வாடாப் போதி மரகதப் பாசடை
மாநிழல் அமர்ந்தோன் நெஞ்சம், யார்க்கும்
அருளின் தீந்தேன் நிறைந்துகனி நெகிழ்ந்து
மலரினும் மெல்லிது என்ப;

அந்த புத்தனுடைய நெஞ்சம் அருளாகிய தீந்தேன் நிறைந்து மிகவும் நெகிழ்ந்து மலரைவிட மென்மை படைத்தது என்பார்கள்.

அந்த மலரைவிட மெல்லிய இதயத்தைக்

"காமர் செவ்வி மாரன் மகளிர்
நெடுமா மழைக்கண் விலங்கினிமிர்ந் தெடுத்த

Koviloor Digital Library

வாளும் போழ்ந்தில வாயின்
யாதோ மற்றது மெல்லிய வாறே.''

அழகு நிறைந்த மாரன் மகளிர்; அவர்களுடைய கண்களோ "விலங்கினிமிர்ந்தெடுத்த" வாட்கள். அவைகள்கூட அந்த மெல்லிய இதயத்தைப் போழ்ந்தில - பிளந்தில - என்றால்,

யாதோ மற்றது மெல்லிய வாறே

அந்த இதயம் மென்மையானவாறு யாதோ !

வாடாப் போதி மரகதப் பாசடை
மரநிழல் அமர்ந்தோன் நெஞ்சம் யார்க்கும்
அருளின் தீந்தேன் நிறைந்துநனி ஞெகிழ்ந்து
மலரினு மெல்லிது என்ப; அதனைக்
காமர் செவ்வி மாரன் மகளிர்
நெடுமா மழைக்கண் விலங்கிநிமிர்ந் தெடுத்த
வாளும் போழ்ந்தில வாயின்
யாதோ மற்றது மெல்லிய வாறே!

ஒரு அழகான பழம் பாடல் இது. புத்த பகவானைப்பற்றிய தமிழ்ப் பாடல்களில் இது மாணிக்கம் போன்றது!

Koviloor Digital Library

கவிதையை அனுபவிக்கும் கலை

'நல்ல கவிதை ஒன்றை ரஸிப்பது மிகவும் அபூர்வமான காரியமாகப் போய்விட்டது இந்தக் காலத்தில்' என்று ஆங்கிலேயர்கள் சொல்கிறார்கள். இந்தச் சொல் எந்த நாட்டுக்கும் எந்தக் காலத்துக்கும் ஓரளவு பொருந்தும் என்று சொல்ல வேண்டும்.

நல்ல கவிதையை அடையாளம் கண்டுகொள்வதும் அனுபவிப்பதும் கிடைத்தற்கரிய ஒரு பாக்யம்.

'அசட்டுப்பிசட்டு என்று ஒரு கவிதை எழுதுவதைவிட நல்ல கவிதையை உணர்வதும் அனுபவிப்பதும் மிகவும் கடினம்' என்று மான்டேய்ன் என்ற ஆசிரியர் சொன்னார். நல்லதொரு உண்மை அது. காரணம், கவிதை என்பதே ஒரு 'உயர் கலை'. அதை ரஸிப்பதற்குப் பண்பாடு வேண்டியதிருக்கிறது.

சாதாரணமாகக் கவிதையை அனுபவிப்பவர்கள் எல்லாரும் அதன் நயத்தைத் தெரிந்துகொண்டு தான் அனுபவிக்கிறார்கள் என்று எண்ணிவிட வேண்டாம். அதாவது கவிதையை, கவிதைக்காகவே ரஸிக்கிறார்கள் என்று எண்ணிவிடவேண்டாம். அதை எழுதிய ஆசாமி, அவருடைய கொள்

Koviloor Digital Library

கைகள், அவருடைய கூட்டாளிகள் - இப்படியாகப் பல காரணங்கள் உண்டு. இந்தக் காலத்தில் தான் என்றில்லை. எந்தக் காலத்திலுமே அப்படித்தான்.

ஒரு பழம்பாடல்; ஔவையார் பாடியது.

விரகர் இருவர்
புகழ்ந்திடவே வேண்டும்
விரல்நிறைய மோதிரங்கள்
வேண்டும்—

பாடுகிறாரே அந்தக் 'கவிஞரு'க்கு விரல் நிறைய மோதிரங்கள் இருக்க வேண்டும்.

விரகர் இருவர்
புகழ்ந்திடவே வேண்டும்.

வேண்டியவர் இரண்டு பேர் - 'ஒரு' இரண்டு பேர் - புகழவேண்டும், 'இவர் அப்படியே கலக் கஞ்சியைக் குடித்து விடுவார்' என்று!

விரகர் இருவர்
புகழ்ந்திடவே வேண்டும்
விரல்நிறைய மோதிரங்கள்
வேண்டும் - அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும்

Koviloor Digital Library

வேண்டும் ; அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும்
நன்று.

அந்தப் புலவர் கட்டியிருப்பது பஞ்சோ, பட்டோ, அவரை ஒரு பெரிய கவிஞர் என்று ஒப்புக்கொண்டு விடுவார்களாம். அவர் நஞ்சாக எழுதினாலும் சரி; வேப்பங்காயாக எழுதினாலும் சரி. அதை உட்கொண்டுவிடுவார்களாம்!

அந்தக் காலத்துப் பாடல் என்றாலும், எந்தக் காலத்துக்கும் பொருந்தக்கூடிய பாட்டு இது. அக்காலத்துக்கேற்றபடி மோதிரம் பஞ்சு பட்டு என்று, படாடோபங்களை வர்ணித்திருக்கிறது. இந்தக் காலத்துக்கு என்றால் வாயில் புகையிலை, கையில் சிகரெட், உடம்பிலே துவளத் துவள ஒரு ஜிப்பா என்றெல்லாம் வர்ணித்திருக்கக்கூடும்.

நிரந்தரமான ஒரு உண்மை பாடலில் கிடக்கிறது. மகா விஷ்ணுவைப்போல அந்த உண்மை வெண்பாவுக்குள்ளே கிடந்து 'அறிதுயில்' செய்கிறது!

ஔவையாருடைய மிக நல்ல பாடல்களில் இதுவும் ஒன்று!

Koviloor Digital Library

எட்டாத பழமும் இறக்காத தேனும்

"Heard melodies are sweet but those unheard are sweeter" என்ற அற்புதமான வரிகள் ஆங்கில இலக்கியத்தில் மிகப் புகழ்பெற்றவை.

கேளாத கானத்தில்தான் எப்பொழுதும் ஒரு மர்மமான சுகம் அடங்கிக்கிடக்கிறது!

கேளாத கானம் என்றால் நாம் இதுவரை கேட்டிராத கானம்; நம்மால் கேட்க முடியாத கானம் - நம்முடைய கேள்வி என்ற நிலைக்கு அப்பால் நின்று ஒலிக்கின்ற பேரானந்த கானம்; என்றெல்லாம் விரிவடையும்.

கேட்டதை வைத்தே மனிதன் கேளாததை அனுமானிக்கிறான். அந்த அனுமானந்தான் இந்தப் பிரபஞ்சத்தின் ரகஸ்யம்.

சப்தம், ச்ப்ரிசம், ரூபம், ரஸம், கந்தம் என்கிற அனுபவங்களுக்கு உள்ளாக அடங்கி இருப்பது ஆனந்தம்; அவற்றிற்கு அப்பால் எட்டி நிற்பதே பேரானந்தம் எனப்படுவது. அது கேளாத சப்தம்; தொடாத ச்பரிசம்; காணாத ரூபம்; சுவைக்காத ரஸம்; நுகராத கந்தம். அதுவே பரமாத்மா!

Koviloor Digital Library

கேளாத கானம் என்றும் சுவையாத கனி என்றும் இறைவனை வர்ணிப்பதில் இந்த அரிய உண்மை அடங்கியிருக்கிறது.

பாட்டைப் பார்க்கலாம்:

பக்தன் இறைவனைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் பாவித்துக் கொண்டு பாடுவது 'நாயகா–நாயகி பாவம்' என்று அழைக்கப்படும். இந்தச் சாயலில் பாடப்பட்டுள்ள தமிழ்க் கவிதைகள் அநேகம், அபாரமான வனப்புடன் திகழ்கின்றன.

"கிளிக்கண்ணி" என்ற பாடல்கள் அத்தனையும் இவ்வகையான வனப்புக் குவியல்!

பக்தனாகிய காதலி இறைவனான காதலனுடன் "முயங்கிய" அந்தப் பேரின்பத்தை வர்ணிக்கிறாள். எப்படி?

எட்டாப் பழமடியோ
  இறக்காத தேனடியோ
மட்டில்லா ஆனந்தமே — கிளியே
  மால்பருகன் தந்த சுகம்

'மால்' என்ற வார்த்தைக்கே 'மயக்கம்' என்று பொருள். அந்த மயக்கத்துக்கே இருப்பிடம்

Koviloor Digital Library

கோபிகா லோலனுன திருமால். அந்தத் திருமாலுடைய சாக்ஷாத் மருமகன்தான் முருகன். அந்த மருகனுடைய மயக்கு - அவன் தந்த சுகம் - எப்படியிருந்தது ?

எட்டாப் பழமடியோ
இறக்காத தேனடியோ.

அது எட்டாத பழம்; பிழியாத - இறக்காத - தேன்!

மட்டில்லா ஆனந்தமே.

எல்லையில்லாத பேரின்பமே!

எட்டாப் பழமடியோ
இறக்காத தேனடியோ
மட்டில்லா ஆனந்தமே — கிளியே
மால்மருகன் தந்த சுகம்.

நாம் மிகவும் பெருமைப்படவேண்டிய பாட்டு இது. "அடியோ" என்று சொல்கிற ஓசையில் உணர்ச்சி பிரமாதமான வேகத்துடன் எவ்வுகிறது. பாடிப் பாடி ஆயுள் நாள் முழுதும் அனுபவித்துக் கொண்டே இருக்கலாம்.

கிளிக்கண்ணி ஒரு அமரகாவியம்!

Koviloor Digital Library

நல்ல சலவை அல்லது ஒரு பழைய லாண்ட்ரி!

சீராமன் ஒரு நல்ல சலவைக்காரன். கம்பர் காலத்தில் அவனுடைய லாண்ட்ரிக்கு அசாத்திய கிராக்கி.

கம்பரிடத்தில் அவனுக்கு மிகவும் பிரியம்; கம்பருக்கும் அவனிடத்தில் அப்படியே.

இதெல்லாம் பாடலிலிருந்து நாம் யூகித்துக் கொள்ளவேண்டிய விஷயங்கள். பாடல் சொல்வ தெல்லாம்,

சிரம்பார்த்தான் ஈசன்; அயன்
தேவிதனைப் பார்த்தான்
கரம்பார்த்தான் செங்கமலக்
கண்ணன் —உரஞ்சேர்
மலைவெளுத்த திண்புயத்து
வண்ணான்சீ ராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக்
கண்டு.

'மலைவெளுத்த' என்றால், 'மலை வெள்கிப்போன' என்று அர்த்தம். அதாவது மலையும் அதைக்கண்டு வெட்கப்படும்படியான அவ்வளவு திண்ணிய தோள் சீராமனுக்கு!

Koviloor Digital Library

—உரஞ்சேர்
பலைவெளுத்த திண்புயத்து
வண்ணான்சீ ராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக்
கண்டு.

உரம் (பலம்) பொருந்திய திண்புயம்; மலையும் வெட்கப்படும்படியான திண்புயம்! யாருக்கு? வண்ணான் சீராமனுக்கு. அவன், கலை (=உடைகளை) வெளுத்துக்கொண்டு வந்தான் மிக்க நேர்த்தியாக. அவ்வளவுதான்; என்ன நேர்ந்தது?

சிரம்பார்த்தான் ஈசன்

ஈசன் - சிவபெருமான் - இருக்கிறானே அவன், தன்னுடைய தலையைப் பார்த்தான்.

அயன்
தேவிதனைப் பார்த்தான்.

பிரும்மா இருக்கிறானே அவன், தன்னுடைய தேவியான "வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கிற" சரஸ்வதியைப் பார்த்தான்.

கரம்பார்த்தான் செங்கமலக்
கண்ணன்

Koviloor Digital Library

தன்னுடைய கையை, ஆழி வெண்சங்கு தாங்கிய கையல்லவா அதை, பார்த்தான் - செங்கமலம் போன்ற கண்ணை உடைய கிருஷ்ணன்.

இஃதெல்லாம் சீராமன் வெள்ளை கொண்டு வந்ததின் பலனாகத்தான் !

மும்மூர்த்திகளையும் இப்படிப் புதுவிதமான முச்செயல்களைச் செய்யும்படியாகத் தூண்டிய பொருள் என்ன ?

"சீராமனுடைய சலவை இவ்வளவு நேர்த்தியாக இருக்கிறதே, நம்முடைய சிரத்திலுள்ள சந்திரன்கூட இந்த வெள்ளைக்கு ஒருபடி இறக்கம் தான்" என்று,

சிரம்பார்த்தான் ஈசன்

"அடடா. வெண்மையும் தானுமாய் இருக்கின்ற நமது ஸரஸ்வதி தேவிகூட..........." என்று,

—அயன்
தேவிதனைப் பார்த்தான்.

தன்னுடைய பாஞ்சஜன்யமாகிய தூய வெண் சங்கை இந்த வெள்ளையோடு ஒப்பிடுகிறவனாகக்

கரம்பார்த்தான் செங்கமலக்
கண்ணன்

எப்படிப் பாடல் !

Koviloor Digital Library

சிரம் பார்த்தான் ஈசன்; அயன்
தேவிதனைப் பார்த்தான்
கரம்பார்த்தான் செங்கமலக்
கண்ணன் —உரஞ்சேர்
மலைவெளுத்த திண்புயத்து
வண்ணான்சீ ராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக்
கண்டு.

வெள்ளையைப் பற்றிய பாடல் இது. அதற்கேற்பச் செய்யுளும் வெண்பா. கடைசி இரண்டு அடிகளிலுமோ "மலைவெளுத்த" "கலை வெளுத்த" என்று அடுக்கடுக்காக வெளுத்து வாங்கியிருக்கிறார் கம்பர்!

சலவை நன்றாயிருக்கிறது என்று நாமும் ஒப்புக்கொள்கிறோம்!

Koviloor Digital Library

வாழ்க முல்லான்

மனிதனைப்போல சலனமான இயக்கம் வேறொன்றில்லை. குரங்கினுடைய தாவுதலுக்கு மனித மனத்தைப் பழைய காலத்தவர் உவமித்தது பொருத்தந்தான்.

காலையிலே ஒரு குணம்; நல்ல மாதிரியாகப் பேசிக் கொண்டிருந்தார். மத்தியானத்துக்குள் மாறிவிட்டது; நேர் மாற்றம்! சாயந்திரம் மீண்டும் சந்தித்தபோதோ, 'தம்பி சௌக்கியமா' என்று பரிவான கேள்வி! இப்படிப்பட்ட மனிதர்கள் மத்தியில், ஸ்திர புத்தியுடைய ஒருவனை - அதிலும் ஸ்திரமான அன்புடையவனைக் கண்டுவிட்டால் எவ்வளவு கொண்டாட்டம் ஏற்படும்.

ஒரு புலவருக்கு!

பாட்டைக் கேளுங்கள் :

காலையில் ஒன்றுவர்
கடும்பகலில் ஒன்றுவர்
மாலையில்ஒன் றுவர்
மனிதரெல்லாம் —

காலையில் ஒரு குணம்; கடும்பகலில் ஒன்று, மாலையில் ஒன்று. நேரத்துக்கு நேரம் ஒவ்வொரு விதம்.

Koviloor Digital Library

காலையில் ஒன்றுவர்
　　கடும்பகலில் ஒன்றுவர்
மாலையில்ஒன் றுவர்
　　மனிதரெலாம் —சாலவே
முல்லானைப் போல
　　முகமும்அக மும்மலர்ந்த
நல்லானைக் கண்டறியோம்
　　　　　　நாம்.

"முல்லான் என்ற பிரபு; அவனைப்போல முகமும் அகமும் மலர்ந்த நல்லான் – நல்லவன் - ஒருவனைக் கண்டதில்லை நாம். அத்தனை ஸ்திரமான அன்பு அவனுடையது" என்பதாகக் கவிதையிலே ஒரு வியப்பு வெளியாகிறது.

ஒன்றுவர், ஒன்றுவர் என்று முதலடியில் இரண்டுதரம் சொல்லிவிட்டு, இரண்டாவது அடியில்

　　　　மாலையில்ஒன் றுவர்

என்று (ஒன்....றுவர் எனச்) சீர் பிரித்து ஓசைவிழுவதன் காரணமாக, வேதனை உணர்ச்சியானது உதறுகிற பாவனையில் வெகு நன்றாய்த் துலங்குகிறது.

ஸ்திரமான அன்புகொண்ட முல்லானுக்குத் தமிழ் இலக்கியத்தில் ஸ்திரமான ஒரு ஸ்தானம் கொடுத்துவிட்டது பாடல்.

வாழ்க முல்லான்!

Koviloor Digital Library

சான்றோர் உடைத்து

ஒரு நாட்டுக்கு நில வளம் நீர்வளம் எல்லாம் மிகப் பெரிய சிறப்புக்கள்தாம். ஆனால் இவற்றை யெல்லாம்விடப் பெரிய சிறப்பு ஒன்று உண்டு. அது அந்த நாட்டின் ஒழுக்கம்தான்.

ஒருநாடு இருக்கிறது; அங்கே யானைத் தந்தம் நிறைய உண்டு. இன்னொரு நாடு இருக்கிறது; அங்கே நல்ல நீர்வளம் நிலவளம் உண்டு. இன்னும் ஒரு நாடு இருக்கிறது; அங்கே முத்துக்கள் ஏரா ளம் — ரொம்ப சரி; ரொம்ப சரி. மற்றொருநாடு இருக்கிறது; அங்கே என்ன?

அந்த நாட்டிலே பெரியோர்கள் இருக்கிறார் கள். முந்திய நாடுகளின் அத்தனை பெருமைகளை யும் தூக்கியடித்துவிட்டது இது!

வேழம் உடைத்து
மலைநாடு

மலைநாடு என்பது சேரநாடு. அங்கே யானை கள் அநேகம். (வேழம் என்றால் யானை)

பேதக்க
சோழ வளநாடு
சோறுடைத்து

Koviloor Digital Library

சோழநாடு — சோழ வளநாடு – இருக்கிறதே, காவேரி பாய்ந்து செழிப்புக் கொடுக்கிற நாடல்லவா அது, அங்கே சோறு இருக்கிறது- அதாவது வயல்கள் பல.

பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து

பூழியர்கோன் — பாண்டியனுடைய — தெற்குப் பக்கத்துக் கடற்பிரதேசம் இருக்கிறதே, அங்கு முத்துக்கள் ஏராளம்.

தெண்ணீர் வயல் தொண்டை
நன்னாடு சான்றோர்
உடைத்து.

தெளிந்த நீர் ஓடுகிற தொண்டைநாடு இருக்கிறதே அங்கேயோ என்றால், சான்றோர்கள் இருக்கிறார்கள்.

வேழம் உடைத்து
மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு
சோறுடைத்து —பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து;
தெண்ணீர் வயற்தொண்டை
நன்னாடு சான்றோர்
உடைத்து.

Koviloor Digital Library

வேழம், சோறு, முத்து என்று மூன்றையும் உடைத்து உடைத்து உடைத்து என்று சொல்லிக் கொண்டே வந்து, "சான்றோர் உடைத்து" என்று வெண்பாவை முடிக்கிற உத்தியினால் கடைசி அடிக்கு ஒரு அழுத்தம் உண்டாய்விடுகிறது.

ஒரு நாட்டின் பெருமையை இதைவிட வேறு எப்படிச் சொல்லிவிட முடியும்!

Koviloor Digital Library

அம்பிகாபதி கதை

கம்பருக்கு அம்பிகாபதி என்று ஒரு மகன் இருந்தானு இல்லையா என்பது பற்றித் தமிழறிஞர் களிடையே அபிப்பிராயபேதம் இருக்கிறது.

பொதுவாகவே இந்தமாதிரி விஷயங்கள் எல்லாம் விவாதித்து முடிவு கட்டிவிடக் கூடியவை அல்ல. காரணம், அசைக்கமுடியாத ஆதாரங்கள் நமக்குக் கிடைப்பதில்லை. எனவே, "Much may be said on both sides" என்றபடி இப்படியும் சொல்லலாம், அப்படியும் சொல்லலாம் என்றுதான் இன்று தேதிக்கு நாம் விட்டுவிடவேண்டும்.

கம்பருக்கு அம்பிகாபதி என்ற ஒரு மகன் இருந்தான் என்பதாகவும் அவன் வாழ்க்கை ஒரு துக்க காவியமாக முடிந்தது என்றும் கர்ணபரம் பரையான கதைகள் கூறும்.

நம்முடைய தமிழ்ப் பாடல்களிலும் சில, அம்பிகாபதி சம்பந்தமாக எழுந்தனவாக வழங்கி வருகின்றன.

ஒரு பாடல். அதன் கதையை முதலில் பார்ப்போம்.

அம்பிகாபதி அரசனுடைய மகளைக் காதலிக்கிருன். அவளுடைய வனப்பில் அவன் மனம் மிக

Koviloor Digital Library

மிக ஈடுபட்டு அதே பித்தமாகவே இருக்கிறான். அரசனுக்கு இந்த விஷயம் தெரிந்து விடுகிறது. கோபம், அசாத்தியக் கோபம்! ஆனாலும் அமபிகா பதி யார்? தன்னுடைய சமஸ்தான கவியாகிய கம்பருடைய மகன். கூப்பிட்டு விடுகிறான் அர சன், கம்பரை. கம்பர் வெகுநேரம் சிந்திக்கிறார். மனம் கிலேசம் அடைகிறது. கடைசியில் அர சனே இதற்கு ஒரு முடிவு சொல்கிறான். அதாவது சிற்றின்ப விஷயமாக இல்லாமல் தெய்வத்தைப் பற்றிச் சேர்ந்தாற்போல் நூறு கவி பாட முடிந் தால், அம்பிகாபதியை நிரபராதி என்று ஒப்புக் கொள்ளலாம் என்கிறான் அரசன். நல்ல யோசனை! காதல் பைத்தியத்தில் இருக்கிற ஒரு கவிஞன் அந்த மனநிலையில் எப்படிக் காதலே வராமல் நூறு கவிகளை வர்ஷிப்பது?

ஆஸ்தான மண்டபத்தில் எல்லாரும் கூடியிருக்கி றார்கள். கம்பரும் இருக்கிறார்; அரசனும்!

அம்பிகாபதி காப்புச் செய்யுள் பாடுகிறான் முதலில். பிறகு, ஒன்று இரண்டு என்று பாடிக் கொண்டே போகிறான் காதலே கலவாமல்! மூன்று, நான்கு, ஐந்து, பத்து.........இருபது.........என்று தொண்ணூற்றொன்பதாவது பாட்டுக்கு வந்துவிட் டான். ஆனால் என்ன நேர்ந்தது?

அரசனுடைய மகள், அம்பிகாபதியின் இத யத் தடாகத்தில் பவனி வரும் அன்னப்பேடு,

Koviloor Digital Library

என்ன செய்தாள்? மேல் மாடத்தின் மறைவில் ஒரே கவலையோடு நின்று ஒன்று இரண்டு என்று எண்ணிக்கொண்டே வருகிருள். ஆனால் ஒரு சிறு தவறு செய்துவிட்டாள்: காப்புச் செய்யுளையும் சேர்த்து ஒன்று இரண்டு என்று எண்ண ஆரம் பித்துவிட்டாள்.

தன்னுடைய காதலன் இந்தப் பரிக்ஷையில் தேறுவானே மாட்டானே என்று ஏகக் கவலை யோடு நின்றுகொண்டிருந்த அரசிளங்குமரி தொண்ணூற்ரென்பதை நூறு என்று எண்ணி ளுளோ இல்லையோ, அவ்வளவுதான். உத்சாகம் பொங்கிக் குதித்துவிட்டது. மெதுவாக மாடத் தின் வழியாகத் தலையை மட்டும் நீட்டி அம்பிகா பதியைக் கண்டு வெற்றியால் முறுவலித்து.........

ஐயய்யோ, இதென்ன திடீரென்று நூருவது கவி.

சற்றே பருத்த தனமே குலுங்கத்
தரளவடம்
துற்றே அசையக் குழையூச லாடத்
துவர்கொள்செவ்வாய்
நற்றேன் ஒழுக நடனசிங் கார
நடையழகின்
பொற்றேர் இருக்கத் தலையலங் காரம்
புறப்பட்டதே.

Koviloor Digital Library

சற்றே பருத்த - அழகுக்கு அவசியமான அளவு பருத்த ; தனமே குலுங்க - தனம் மட்டும் குலுங்கு கிறது. (உடல் முழுதும் குலுங்கினுல் அழகில்லை!)

சற்றே பருத்த தனமே குலுங்க

முத்துமாலை அந்தத் தனத்தோடு நெருங்கி அசை கிறது. 'துற்றே' என்ருல் "நெருங்கித்தானே' என்று அர்த்தம். (தரளவடம் - முத்துமாலை)

தரளவடம்

துற்றே அசைய

காதில் அணிந்திருக்கிருள் - அரசிளங்குமரியல்லவா-நல்ல குண்டலங்கள் (குழை). அந்தக் குண்டலம் ஊஞ்சலாடுகிறதாம்.

குழையூசல் ஆட

துவர்கொள் செவ்வாய் - பவளத்தைக்கொண்ட சிவந்த உதடுகளில்,

நற்றேன் ஒழுக

தேன் கசிய

நடனசிங்கார நடையழகின்

பொற்றேர்

Koviloor Digital Library

நடனத்தின் வனப்பைப் பெற்ற, அழகிய நடை கொண்ட, பொன்மயமான தேர் இருக்கிறதே அது,

பொற்றேர் இருக்கத் தலையலங் காரம்
புறப்பட்டதே

அந்தப் பொன்மயமான தேர் உள்ளே இருக்கிறது, மறைவில்! அது புறப்படவில்லை; அந்தத் தேரின் தலை மட்டும் புறப்பட்டது.

(என் கண்முன் அவளுடைய தலைமட்டும் அதோ தெரிகிறது என்று பொருள்.)

சற்றே பருத்த தனமே குலுங்கத்
தரளவடம்
துற்றே அசையக் குழைஊசல் ஆடத்
துவர்கொள்செவ்வாய்
நற்றேன் ஒழுக நடனசிங் கார
நடையழகின்
பொற்றே ரிருக்கத் தலையலங் காரம்
புறப்பட்டதே.

நூறுவது பாட்டு இந்த விதமாக ஒரு அருமை யான காதற் பாட்டாக முடிந்துவிட்டது! பிறகு என்ன நேர்ந்தது என்பதெல்லாம் தெரிந்த கதை.

Koviloor Digital Library

நிஜமோ பொய்யோ, அம்பிகாபதியின் கதை ஒரு அற்புதமான கதை. அதில் நடப்பு இருக்கிறதோ இல்லையோ, அழகு இருக்கிறது. நிரந்தரமான ஒரு பொருளும் இருக்கிறது.

தமிழுக்கு ஒரு சிறந்த கவிதை கிடைத்துவிட்டது அம்பிகாபதி கதையின் மூலமாக!

Koviloor Digital Library

கடவுட் தத்துவம்

கடவுள் உண்டா இல்லையா என்ற கேள்வி மனிதனுக்கு அறிவு தோன்றிய காலத்திலிருந்து விவாதிக்கப்பட்டு வந்திருக்கிறது. மனிதனுக்கு அறிவு நிற்கும்வரை விவாதிக்கப்பட்டு வரும்.

அந்தக் கேள்வியும் கடவுளைப்போல அழியாத தன்மை வாய்ந்தது!

பழம் பாடல் ஒன்று இந்த விவாதத்துக்கு மிகவும் அழகாகப் பதில் சொல்லுகிறது.

இலனென இகழ்ந்தோர்க்கு இல்லையு மாயினை
உளனென உணர்ந்தோர்க்கு உளையுமாயினை

இல்லை என்று சொல்வார்க்கு இல்லாமலே போனாய்; உண்டு என்பார்க்கு உண்டாகினாய்.

இலனென இகழ்ந்தோர்க்கு
இல்லையு மாயினை!
உளனென உணர்ந்தோர்க்கு
உளையு மாயினை!
அருஉரு என்போர்க்கு
அவையும் ஆயினை!

உன்னைச் சிலர் உருவமற்ற அரு, அதாவது ஸ்தூல மற்ற சூக்ஷ்மம் (abstract) என்று சொல்லுவார்கள்.

Koviloor Digital Library

அவர்கள் சம்பந்தப்பட்டவரை நீ உருவமின்றியே ஆயினை. வேறு சிலர் நீ உருவமுடையவன் என்கிறார்கள். அவர்களுக்கு நீ உருவமாகவே காட்சி தருகிறாய்.

இலனென இகழ்ந்தோர்க்கு
இல்லையும் ஆயினை!
உளனென உணர்ந்தோர்க்கு
உளையும் ஆயினை!
அருஉரு என்போர்க்கு
அவையும் ஆயினை!
பொருவற விளங்கிய
போதம் ஆயினை!

'எல்லையற்ற ஞானமாக நிற்கின்றாய் நீ' என்று முடிப்பதில், என்ன அழகு சுடர் விடுகிறது பாருங்கள்.!

Koviloor Digital Library

ஒரு சிறு நாடகம்

ஒரு நாள் ஒட்டக்கூத்தர் வழக்கம்போலச் சோழனுடைய சபையிலே தம்முடைய புதுக் கவியை அரங்கேற்ற ஆரம்பித்தார்.

அந்தக் காலத்தில் அரச நீதியில் ஏதாவது தவறு நேர்ந்துவிட்டாலோ அல்லது பொது மக்களில் யாருக்காவது ஏதாவது இடையூறு நேர்ந்தாலோ, 'விடுவிடு' என்று அரண்மனை வாயிலுக்கு வந்துவிடவேண்டியது: பெரியதொரு மணி தொங்கும். அதை அசைத்துவிட்டால் நேரே அரசனே கூப்பிட்டுவிட்டு, விஷயத்தை விசாரித்து நீதி வழங்குவான்.

சோழனுடைய ஆட்சியிலும் இந்த மணி இருக்கத்தான் செய்தது. ஆனல் அலுவல் இல்லாமல் உறங்கியது! ஏதாவது தவறு நேர்ந்தால் அல்லவா அந்த மணி அடிக்கப்போகிறது! சோழனுடைய ஆட்சிதான் எல்லாம் ஒழுங்காக இருக்கிறதே. . எனவே மணியினுடைய நாவே அசைவதில்லை!

ஒட்டக்கூத்தர் இந்த விஷயத்தைப் பாடலாக ஆரம்பிக்கிருர் :—

" ஆடும் கடைமணி நாவசை யாமல்

Koviloor Digital Library

கடை என்றால் வாயில்.

ஆடும் கடைமணி நாவசையாமல்
அகிலமெல்லாம்
நீடும் குடையில் தரித்தபி ரான்....

கடைமணியின் நா அசையாமல் இந்த அகிலத்தைத் தன்னுடைய நீண்ட (நீடும்) பெரிய குடையின்கீழ் காக்கும் பிரான்.

ஒட்டக்கூத்தர் 'தரித்தபிரான்' என்று சொல்லி அதற்குமேல் பாடுவதற்குள் சோழன் இடைமறிக்கிறான்.

'தரித்தபி ரான்' என்று
நித்தம் நவம்
பாடும் கவிப்பெரு மானொட்டக் கூத்தன்

'......பிரான்' என்றே நித்தம் நவம் பாடுகிறாரே (புதிது புதிதாகக் கவி பாடுகிறாரே) அந்தக் கவிப் பெருமானாகிய ஒட்டக் கூத்தனுடைய

பாதாம்புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழனென் றேயெனைச்
சொல்லுவரே.

என்றெல்லாம் புதிது புதிதாகப் பாடுகிற ஒட்டக் கூத்தருடைய பாதாம்புயத்தைத் தலையில் சூடுகிற

Koviloor Digital Library

வன் நான்; குலோத்துங்க சோழன் என்பது என் பெயர்.

சோழன் கவிஞரோடு நெடுநாள் பழகியவன் அல்லவா. அவரை ஒரு மடக்கு மடக்கிவிட்டான், அவருடைய பாணியிலேயே!

'ஆடுங் கடைமணி நாவசை யாமல்
அகிலமெல்லாம்
நீடுங் குடையில் தரித்த பிரான்' 'என்று
நித்தநவம்
பாடும் கவிப்பெரு மான்ஒட்டக் கூத்தன்
பாதாம்புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழனென் றேயெனைச்
சொல்லுவரே!'

'சூடும்' என்பதிலிருந்து 'பிரான்' என்பதுவரை ஒட்டக்கூத்தருடைய பேச்சு. 'என்று' என்பதி லிருந்து 'சொல்லுவரே' என்பதுவரை குலோத் துங்கன்.

ஏப்படி நாடகம்!

Koviloor Digital Library

மேலாடை மகாத்மியம்!

'ஆள் பாதி, ஆடை பாதி' என்பது சாதாரண வசனம். அது மிகவும் உண்மையான ஒரு வசனம்.

நம்முடைய பண்பாட்டைக் கூறுகிற ஆசாரக் கோவை என்ற நூல், நமது பெரியோர்கள்,

'ஒன்றுடுத்து என்றும் அவைபுகார்'

மேல் வேட்டி இல்லாமல் சபைக்குப் போகமாட்டார்கள் என்று பெருமைப்படுகிறது.

இந்த மேல்வேட்டி ஆசாரத்தில் ஒரு அர்த்தம் இருக்கிறது என்று தெரிகிறது.

அதாவது,

மேலாடை இன்றிச் சபைபுகுந்தால் இந்த
மேதினியோர்
நூலாயிரம் படித்தாலும் என்னார்

இந்த உலகத்து மக்கள் இருக்கிறார்களே அவர்கள், ஆயிரம் நூல் படித்த அறிஞனாயிருந்தாலும் சரி; மேலாடை இல்லாவிட்டால் அவனை எண்ணுவதே இல்லையாம். அவன் ஆளோடு சேர்த்தி யில்லை!

இதற்கு ஒரு நிரூபணம் வேண்டுமல்லவா?

நுவல்

Koviloor Digital Library

சொல்லையா இந்த உதாரணத்துக்குப் பதில் !

நுவல்; பாற்கடலோ
பாலன வர்அணி பொன்னுடை கண்டு
மகளைத் தந்தே
ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும்
அரன்தனக்கே

இந்தப் பாற்கடலைச் சொல் முதலில். மஹா விஷ்ணு பீதாம்பரம் (பொன்னுடை) அணிந்திருக்கிறார் என்று, அவருக்குத் தன்மகளை (லக்ஷ்மியை)க் கட்டிக்கொடுத்தது. இந்த அரன் (பரமசிவன்) தோலாடை கட்டியிருப்பதைப் பார்த்துவிட்டு, அவனுக்கு விஷத்தை—ஆலகால விஷத்தைக்—கொடுத்துவிட்டது. பார்த்துக்கொள். உலகமே அப்படித்தான். எல்லாம் முறுக்கிலேதான் இருக்கிறது காரியம். ஆகையினால் கொஞ்சம் அலங்காரத்திலும் கவனம் செலுத்த வேண்டுமாக்கும் என்கிறது கவியின் சாயல்!

மேலாடை இன்றிச் சவைபுகுந்தால், இந்த
பேதினியோர்
நுலாயிரப்படித் தானுமெண்ணார்; நுவல்!
பாற்கடலோ
பாலா னவர்அணி பொன்னுடை கண்டு
மகளைத்தந்தே

Koviloor Digital Library

ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும்
அரன்தனக்கே.

மேலாடை என்றால் மேல்துண்டு என்றுதான் அர்த்தம் என்பதில்லை. மேல்நாட்டாருடைய உடையில் மேல்துண்டே கிடையாது. அதனால் அவர்களுக்கு எண் இல்லை என்று சொல்லி விடலாமா? மேலாடை என்பது கொஞ்சம் வெளி அலங்காரம் என்பதைச் சொல்வதற்கு ஒரு சின்னம்: அவ்வளவுதான்.

பாடலை எழுதிய புலவரின் பெயர் நையாண்டிப் புலவர் என்கிறார்கள். அது என்னவோ! பாடலில் நையாண்டி இருக்கிறது. அந்த நையாண்டிக்குள் நயமான ஒரு விஷயமும் இருக்கத்தான் செய் கிறது!

Koviloor Digital Library

உள்ளம் ஆடுகிறது ஊஞ்சல்!

அவளைக் கண்டான். அவ்வளவுதான் தெரியும் நமக்கு. ஐயா, அந்த வினாடியிலிருந்து அவனுக்கு ஏற்பட்டுள்ள மாற்றம் இப்படி அப்படி என்று சொல்லிவிட முடியாது!

ஏங்குகிறான்; சிரிக்கிறான்; கண்ணீர் விடுகிறான். திடீரென்று ஏதேதோ பிதற்றுகிறான்!

இதெல்லாம் காதலின் விளைவுதான் போலும்.

இதோ என்னவோ சொல்கிறான், கூர்ந்து கேட்கலாம்.

தாதளவி வண்டு
தடுமாறும் தாமரைகொல்!
மாதர் விழியுலவு
வாண்முகங்கொல்!

இதற்கு முன்னால் அவன் தாமரை மலரைப் பார்த்ததுண்டு. அந்த மலரில் தேனைக் குடித்துவிட்டு அந்தப் போதையினால் வண்டு அங்குமிங்கும் தடுமாறுகிற காட்சியை மிக நன்றாகக் கவனித்திருக்கிறான்! இப்பொழுது அவளுடைய பிரகாசமான (வாண்முகம்) முகத்தையும், அதில் அங்குமிங்கும் மருளுகிற வண்டுபோன்ற கருவிழிகளையும் கவனித்

Koviloor Digital Library

தான். இதுவோ அதுவோ என்று மனசுக்கு சந்தேகம் வந்துவிட்டது. வண்டுக்கு ஏற்பட்ட போதைபோல ஒரு தடுமாற்றம் !

தாதளவி வண்டு
தடுமாறும் தாமரைகொல் !

இதென்ன ! தேனை அளைந்து (தாதளவி) வண்டு தடுமாறுமே அங்கு இங்கு என்று, அந்தத் தாமரையா ? அல்லது,

மாதர் விழியுலவு
வாண்முகங்கொல் !

'பெண்கள் விழி' என்று தனியாக ஒரு பொல்லாத வஸ்து இருக்கிறதே அந்த வஸ்து உலவுகிற முகம்தானு !

காதலனுக்கு இரண்டில் இன்னது என்று ஸ்திரப்படுத்த முடியவில்லை ! இப்படியும் செல்கிறது புத்தி; அப்படியும் செல்கிறது புத்தி. ஒரே ஊஞ்சலாட்டம்தான்.

தாதளவி வண்டு
தடுமாறும் தாமரைகொல் !
மாதர் விழியுலவு
வாண்முகங்கொல் !—யாதென்று

Koviloor Digital Library

இருபால் கவருற்று
இடையூசல் ஆடி
ஒருபால் படாதுஎன்
உளம்.

இங்கும் அங்குமாகக் கவரப்பெற்று இவை இரண்டிற்கும் இடையிலேயே ஊஞ்சல் ஆடுகிறதே ஒழிய, ஒரு பாற் படவில்லை! அதாவது ஒரு பக்கமாகச் சேரவில்லை.

காதலியினுடைய முகம் தாமரைபோல் இருக்கிறது. அவளுடைய விழிகள் வண்டைப்போல் கருகரு என்றிருக்கின்றன. அந்த விழிகள் முகத்தில் அங்குமிங்குமாக உலவுவது, வண்டு தேனை அளாவி—அதாவது அளவுக்குமேல் 'ஒரு கை பார்த்து' விட்டு—அந்தத் தாமரையிலேயே நிலையில்லாமல் தடுமாறிக்கொண்டிருப்பதைப் போல இருக்கிறது.

பாடலின் விஷயம் இவ்வளவுதான். இதை இப்படியே சொல்லிவிடலாம். ஆனால் இப்படியே சொல்வதில் ரஸம் இல்லை. காதலனுடைய மனசுக்குள் பாய்ந்து அவனுடைய ஊஞ்சலாட்டத்தோடு கவி வருகிறது. 'கொல்!' 'கொல்!' என்ற வியப்புச் சொல் உணர்ச்சியின் சாயலை நன்ருகக் காட்டுகிறது.

அருமையான பாடல்!

Koviloor Digital Library

வஞ்சியே வஞ்சியான் வஞ்சித்தான்!

சேரனைப்பற்றிய ஒரு பழம் பாட்டு. நல்ல ரஸமான பாட்டு. பார்க்கலாம்:

வஞ்சி என்ற வார்த்தைக்குப் பல பொருள் உண்டு. அந்தப் பலபொருள் உள்ள ஒரு வார்த்தையை வைத்துக்கொண்டு நல்ல தட்டுத் தட்டிவிட்டார் புலவர்.

வஞ்சி என்றால் 'பெண்' என்று ஒரு அர்த்தம். 'வஞ்சிநாடு' (சேரநாடு) என்று ஒரு அர்த்தம். 'சூதாக ஏமாற்று' (வஞ்சித்திடு) என்று இன்னொரு அர்த்தம்.

காதலி தன் தோழியிடம் பேசுவதாகப் பாடலின் அமைப்பு.

வஞ்சியேன் என்றவன்தன்
ஊருரைத்தான்

'அம்மா தோழிப் பெண்ணே! கேளம்மா விஷயத்தை. இந்தச் சேரன் இருக்கிறானே அவன் 'வஞ்சியேன் - வஞ்சிநாட்டவன்' என்று, தன்னுடைய ஊரைச் சொன்னான்.

Koviloor Digital Library

யானும் அவன்
வஞ்சியான் என்பதனுல்
வாய்நேர்ந்தேன்

நானும் அவன் வஞ்சிநாட்டுரசன் என்பதனுல் ஏதோ இரண்டு வார்த்தை பேசினேன். (வாய் நேர்ந்தேன் என்பதன் நயத்தைக் கவனிக்கவேண்டும். பேசினேன் என்று சொல்லிவிட்டால் அதில் நயம் இல்லை!)

வஞ்சியேன் என்றவன்தன்
ஊருரைத்தான் யானுமவன்
வஞ்சியான் என்பதனுல்
வாய்நேர்ந்தேன்—

ஏதோ லேசாக அப்படி வார்த்தை கொடுத்தேனு வந்தது வினை!

—வஞ்சி! யான்
வஞ்சியேன் வஞ்சியேன்
என்றுரைத்தும்

ஏ பெண்ணே! நான் வஞ்சியேன் வஞ்சியேன் என்று சொல்லிவிட்டு

வஞ்சித்தான்

எனக்கு வஞ்சகம் செய்துவிட்டான். (என் உள்ளம் கவர்ந்து சென்ருன்- நான் வாடுகிறேன்!)

Koviloor Digital Library

வஞ்சியேன் வஞ்சியேன்
என்றுரைத்தும் வஞ்சித்தான்.

இத்தனை வஞ்சகமும் செய்தது யார்?

வஞ்சியாய்!

ஏ பெண்ணே - ஏ தோழியே கேள்,

வஞ்சியார் கோ.

வஞ்சிநாட்டு - சேரநாட்டு - மன்னன் அவன்!

"வஞ்சியேன்" என்றவன்தன்
ஊருரைத்தான் யானுமவன்
வஞ்சியான் என்பதனால்
வாய்நேர்ந்தேன் - "வஞ்சி! யான்
வஞ்சியேன் வஞ்சியேன்"
என்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய்! வஞ்சியார்
கோ.

சாதுர்யமும் உணர்ச்சிப்பாடும் நல்ல முறையில் விரவி நிற்கிற ஒரு வெண்பா இது.

Koviloor Digital Library

உள்ளத்தனையது உயர்வு

'மனம்போல் வாழ்வு' என்பது நம் நாட்டு மக்கள் கூறும் சாதாரணச் சொலபடை. பெரிய கருத்து அதில் இருக்கிறது.

'எல்லையற எது பாவித்திடினும் அதுவாவன்' என்கிறது சாந்தோக்கிய உபநிஷதம். இதைப் பற்றியே ஜேம்ஸ் ஆலன் ஒரு நூல் எழுதி உலகப் பிரஸித்தி அடைந்தார்.

நமது திருவள்ளுவரிடம் இந்தக் கருத்து அகப் படாமலா போய்விடும். ராஜநடை நடந்து வரு கிறது குறள் !

வெள்ளத் தனைய
மலர்நீட்டம்

"தம்பி, இப்படி வா பக்கத்திலே, ஒரு விஷயம் சொல்கிறேன்."

வெள்ளத் தனைய
மலர்நீட்டம்

தாமரைத் தண்டினுடைய நீளம் - உயர்வு - எதைப் பொறுத்திருக்கிறது? - தண்ணீரின் ஆழத்தைப் பொறுத்திருக்கிறது. தண்ணீர் ஆழமாய் இருந்

Koviloor Digital Library

தால் மலரும் நீளமாய் இருக்கும். தண்ணீர் முட்டளவு இருந்தால், மலரும் முட்டளவுதான்!

வெள்ளத் தனைய
    மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனையது
    உயர்வு.

மக்களுடைய உள்ளத்துக்குத் தக்கபடிதான் அவர்களுடைய உயர்வும் ஏற்படுகிறது.

திருக்குறள் என்றால் கடுகுக்குள் கடல் என்பார்கள். எப்படி அலை வீசுகிறது பாருங்கள்!

Koviloor Digital Library

நர் என்பேன் நன்

புலவர்களுக்குச் சில 'லைஸென்ஸ்கள்' உண்டு! அவற்றில் ஒன்று இசைப் பண்மையும் செய்யு ளமைப்பையும் உத்தேசித்துச் சில சமயங்களில் சற்று நீட்டியோ குறுக்கியோ சொல்ல நேரும். இதைக்கண்டு வெகுளாமல் அவர்களது 'புலவர் உரிமை' என்று விட்டுவிடவேண்டும்.

'புலவர் உரிமை' என்று விட்டுவிட நாம் சித்தமாயிருக்கிறோம். ஆனால் புலவர்கள் ஒரு வருக்கொருவர் இந்த உரிமையைப் பற்றிச் சண்டை போட்டுக்கொண்டால்!

கம்பர் ஒரு இடத்தில் ஓசைக்காக 'நாரா யணன்' என்ற வார்த்தையை 'நராயணன்' என்று குறுக்கிவிட்டால், காளமேகம் சம்மதிக்கவேண் டுமே! வந்துவிட்டது கோபம்!

> நாரா யணனை
> நராயணன்என் றேகம்பன்
> ஓராமல் சொன்ன
> உறுதியால் -

இப்படிக் கம்பர் சொல்லிவிட்ட 'லைஸென்ஸ்' ஸினால் காளமேகத்துக்கு எப்படி ஆத்திரம் பொங்குகிறது பாருங்கள்.

Koviloor Digital Library

—நேராக

அதாவது சுற்றி வளைக்காமலேயே,

வார் என்றால் வர் என்பேன்
வாள் என்றால் வள் என்பேன்
நார் என்றால் நர் என்பேன்
நன்.

ஆத்திரம் என்ற உணர்ச்சி மிக நன்றாகப் பாடலில் துலங்குகிறது. கடைசியில் 'நான்' என்பதை 'நன்' என்றது வெகு அருமை!

நாராயணனை நராயணன் என்று சொல்லலாமா கூடாதா என்பது இங்கு முக்கியமில்லை. இது கம்பர், இது காளமேகம், என்பதையும் மறந்துவிட்டுப் பாடலைப் பார்க்கவேண்டும்.

கவிராயர்களுக்குள் ஏற்பட்ட ஆத்திரம் நல்ல ரஸமான ஒரு பாடலைத் தமிழுக்குத் தந்து விட்டது!

நாராயணனை
நராயணன்என் றேகம்பன்
ஓராமல் சொன்ன
உறுதியால் - நேராக

Koviloor Digital Library

வார்என்ருல் வர்என்பேன்
வாள்என்ருல் வள்என்பேன்
நார்என்ருல் நர்என்பேன்
நன்.

---

* ஒருசமயம் டாக்டர் சாமிநாதையர் அவர்கள் இக் காலப் புத்தகங்களில் பெரும்பாலும் 'நான்' என்றே கடைச் சீர் காணப்படுவதன் தவற்றையும், 'நன்' என்பதன் நயத்தை யும் குறிப்பிட்டது இங்கே நினைவுகூரத் தக்கது.

Koviloor Digital Library

எந்தை குன்றம்

'காகம்அணு காமலையில் மேகநிரை சாயும்' என்ற திருக்குற்றாலக் குறவஞ்சி அடிகள் நம்மில் அநேகருக்குத் தெரிந்திருக்கும். திரிகூட ராஜப்பன் கவிராயர் தம்முடைய மனசைக் காகத்தின் பின்னாலேயே தொடர்ந்து பறக்கவிட்டு முடிவில் காகம் அணுகாத எல்லைக்கும் சென்றுவிடுகிறார். அங்கே-அந்தக் காகமும் போகமுடியாத அவ்வளவு உச்சியான வானவெளியிலே-என்ன காணுகிறார்? மேகக் கூட்டங்கள் நிரை நிரையாக (கூட்டம் கூட்டமாக) வந்து 'சாயு' மாம். 'சாயும்' என்று எத்தனை ஆற்றலோடு ஒரு வார்த்தை விழுந்திருக்கிறது பாருங்கள்! மேகத்தை அப்படியே கண்ணுக்கு முன்னால் கொண்டு நிறுத்தி விடுகிறது அந்த வார்த்தை!

இன்னொரு பாடல். அதே மாதிரி மேகத்தைப் பற்றி:

> 'ஆடு கழைகிழிக்கும் அந்தண்
> புயலிற்றே - எந்தை குன்றம்.'

மலை எல்லாம் ஒரே மூங்கில் - காடாக இருக்கிறது. உயர உயர நிற்கின்ற மூங்கிற் கழைகள் எல்லாம் வானை அளாவுகின்றன! மேகங்களோடு

Koviloor Digital Library

அளவளாவுகின்றன என்றே சொல்லத் தோன்றும் நமக்கு! காற்றினுல் தூக்கிவரப்படுகிற மேகம் இந்தக் கழைகளின் உச்சியினூடாக அசைந்து வருகிறது. மூங்கிலும் காற்றிலே அசைகிறது. என்ன ஆகிறது? ஜவுளிக் கடையிலே துணியை இழுத்துப் பிடித்துக்கொண்டு மத்தியில் கத்திரியை ஓடவிடுவார்களே அதுபோல, 'டா.........ர்' என்று இரண்டாகக் கிழிந்துவிடுகிறது அந்த அழகிய கருமேகத் துணி!

ஆடுகழை - ஆடுகின்ற (காற்றில் ஆடுகின்ற) மூங்கில்.

கிழிக்கும் - (ஆடுகின்ற மூங்கில்) கிழிக்கின்ற அந்தண் புயலிற்றே - அழகிய குளிர்ச்சியான மேகத்தை உடையதாக்கும் எந்தை குன்றம்.

ஆடு கழைகிழிக்கும் அந்தண் புயலிற்றே
- எந்தை குன்றம்!

Koviloor Digital Library

பண்பொழில்

சோலையைப் பற்றி நினைத்துவிட்டால் நம் மனம் எப்படியெல்லாமோ மகிழ்ச்சியடைகிறது. அவரவர் மனோபாவத்துக்கெல்லாம் ஏற்பச் சிந்தனைகளையும் வார்த்தைகளையும் தோற்றுகிறது.

தமிழ் இலக்கியத்தில் சோலைகள் எத்தனையோ மலர்ந்திருக்கின்றன. ஏடுஏடாகப் பக்கம் பக்கமாக மலர்ந்திருக்கின்றன!

நமது கவிஞர்கள் எவரும் சோலையை வர்ணிப்பதில் சளைப்பதில்லை. காரணம், கற்பனை எவ்வளவு தூரம் குறைந்த ஒருவனையும் அது ஆகர்ஷிக்கிறது.

ஒரு அருமையான பழம்பாடல், சோலையிலே ஒரு பாட்டுக்கச்சேரி நடத்தி அந்தப் பாடகருக்குக் கச்சேரி முடிவில் மாலையும் போட்டு அனுப்புகிறது!

'கழிமலர்ந்த காவிக் களிவண்டு
பாட'

சரி; பாடகர் யார் என்று நமக்குத் தெரியும்! சங்கீதத்தில் எத்தனையோ ஆயிரம் வருஷங்களாக 'இசைப்புகழ்' பெற்ற வித்வான்தான் அவர்.

Koviloor Digital Library

'வண்டு' என்பதாகத்தானே அவர் பெயர்; நமக்கு அவரைத் தெரியும்!

கழிமலர்ந்த காவிக்
களிவண்டு பாடக்
குழிமலர்ந்த நீலம்
குறுமுறுவல் கொள்ளும்.

சரிதான்; பாடகருக்கு எதிரே உட்கார்ந்து கேட்கும் ரஸிகர் யார்? அவரையும் நமக்குத் தெரியும் போலிருக்கிறதே!

ஆமாம்; நீலோத்பலம் என்று அவருடைய நாமம். பெண்மணிதான்! சங்கீதத்தைக் கேட்டு விட்டு அந்த ஆனந்தம் முகத்திலே ஓடுகிறது பாருங்கள்.

குழிமலர்ந்த நீலம்
குறுமுறுவல் கொள்ள

கச்சேரியை ரஸிகர் பிரமாதமாக அனுபவித்து விட்டார். எனவே, வந்தனோபசாரம் செய்ய வேண்டும் அல்லவா!

பொழில் மலர்ந்த பூம்புன்னை
நுண்தாது சிந்தும்.

Koviloor Digital Library

சோலையிலே மலர்ந்து நிற்கிற புன்னை மரமானது மகரந்தப் பொடியைத் தூவுகிறது! எப்படி, பாட்டும், அனுபவமும், வந்தனோபசாரமும்!

கழிமலர்ந்த காவிக்
களிவண்டு பாடக்
குழிமலர்ந்த நீலம்
குறுமுறுவல் கொள்ளும்!
குழிமலர்ந்த நீலம்
குறுமுறுவல் கொள்ளப்
பொழில்மலர்ந்த பூம்புன்னை
நுண்தாது சிந்தும்.

இது ஒரு இயற்கை இசையரங்கு!

Koviloor Digital Library

ஒரு தமிழ்நாட்டு உமர்காயம்

பாரசீகக் கவிஞர் உமர்காயம் அற்புதமான கவிஞர். வாழ்க்கை என்ருல் அது ஒரு இன்பப் பூஞ்சோலை என்று சாதிக்கும் சர்வானுகூல வாதி அவர். 'துன்பம் என்பது இல்லை. வா, மதுக்கிண்ணத்தைக் கையிலே ஏந்து; மறந்துவிடு எல்லாவற்றையும். இதோ மது மது மது' என்பதே அவருடைய 'சித்தாந்தம்'!

உலக ரசிகர் எல்லாம் உமர்காயம் ஒரு அற்புதமான கவிஞர் என்று பாராட்டுவதோடு அவருடைய இந்தக்கொள்கை புதிய முறையில் அபாரமான சக்தியுடன் விளங்குகிறது என்று அதிசயிக்கிருர்கள்.

தமிழ்ப் பாடல் ஒன்றில் ஒரு தமிழ் உமர்காயம் எப்படிப் பேசுகிருர் என்று பார்க்கலாமா?

சோழன் பாடியதாகக் காணப்படுகிற ஒரு பழைய பாடல்:—

நல்ல கார்காலம்.. உடலோடு மனத்துக்கும் குளிர்ச்சி தரக்கூடிய சுகமான காலம். அந்த ரம்யமான குளிர்ச்சியானது இன்ப நினைவுகளை மனத்தில் கூட்டுவிக்கிறது.

Koviloor Digital Library

அகிற்புகையின் மணமும் கஸ்தூரியின் வாசனை யும் வீசுகின்ற, நீண்டு தொங்குகின்ற, கவர்ச்சிகர மான கூந்தலும், ஏந்தி நிற்கின்ற தனபாரங்களும், இறுகித் தழுவுதற்கேற்ற அந்த அழகிய தோளும் – அடடா .... மழைக்காலம், வேறு என்ன கவலை நமக்கு !

காந்தும் அகிற்புகையும்
கத்தூரி யும்புனுகும்
சாந்தும் மிகநாறும்
தாழ்குழலும் — ஏந்துதனம்
தோளோடு தோள்இறுகத்
தோகையும் உண்டாமால்
நாளோ மழைநாள்
நமக்கு.

நாள் எப்படிப்பட்ட நாள்? மழை நாளாடா நமக்கு. அந்த 'நமக்கு' என்று சொல்வதில் என்ன உணர்ச்சி வந்துவிடுகிறது ! அதுமட்டுமா, 'உண்டாமால்' என்பதிலுள்ள 'ஆல்', அந்த உத் சாகத்தை எத்தனை துலாம்பரமாய்க் காட்டுகிறது பாருங்கள் !

"தோகையும் உண்டாம்" – என்றால் பாடலில் களிப்பு வரவில்லை.

Koviloor Digital Library

" தோகையும் உண்டாமால் " என்று சொல்லி விட்டாலோ களிப்பு மிக நன்றாய்த் துலங்கி விடு கிறது !

தமிழுக்குக் கிடைத்த ஒரு சுகமான உமர் காயம் — பாடல் இது !

Koviloor Digital Library

ஒரு எச்சரிக்கை !

'என்னவோ சார், ஒரு வேகத்திலே சொல்லிட்டேன்.........மன்னிச்சிடணும்'.

இந்த மாதிரி எத்தனைபேர் மன்னிப்புக் கோருகிறார்கள். இது எதற்கு என்று முன்னதாகவே எச்சரிக்கை செய்கிறார் நம்முடைய உலகப் பெரியார் திருவள்ளுவர்.

யாகாவா ராயினும்
நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்
பட்டு.

எதைக் காத்தாலும் காக்காவிட்டாலும், நாக்கு இருக்கிறதே நாக்கு, அதைமட்டும் காத்துவிடத்தான் வேண்டும். இல்லையென்றால் 'எக்கச்சக்கமாக' எதையாவது சொல்லிவிட்டுப் பிறகு அவஸ்தைப்படவேண்டி நேரிடும். ஆகையினால் எச்சரிக்கை !

'சோகாப்பர்' என்றால் 'துன்பப்படுவர்' Repentance என்கிற ஒருவகையான பச்சாத்தாபமும், 'சோகாத்தல்' என்பதில் அடங்கும்.

பின்னர் வருந்தும்படியாக, மன்னிப்புக் கேட்கும்படியாக, ஒரு வார்த்தை சொல்வானேன்

Koviloor Digital Library

என்கிறார்! 'ஒரு சொல் வெல்லும், இன்னொன்று கொல்லும்' என்று சாதாரணமாக வீடுகளில் சொல்வார்களே, அந்த எச்சரிக்கை இதில் இருக்கிறது.

இந்தக் குறள் அடிக்கடி சொல்லக் கேட்டது தான். ஆனாலும் அதன்படி நடக்க முடிகிறதோ?

சொல்லுதல் யார்க்கும்
எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம்
செயல்.

என்ற வேறொரு குறள்தான் இந்த இடத்தில் நினைவுக்கு வருகிறது!

Koviloor Digital Library

எப்படி வர்ணனை ?

'என்னுடைய மனத்திலே வாழ்கிருள் அவள். ஆனுல் உங்கள்வரையில் அவள் பாண்டியனுடைய மடத்தில்தான் இருக்கிருள்' என்பதாகக் காதலன் சொல்கிருன்.

அவனுடைய காதலி ஓர் இன்பவல்லி; பாண்டியனுடைய மடத்தில் அவள் இருக்கிறள்; அவனுடைய இதயததில் வசிக்கிறள்.

தடக்கை யான்சது
ரானன பாண்டிதன்
மடத்து ளாள்என்
மனத்துறை வல்லியே.

மடத்தில் 'உளாள்' என்று லேசாகச் சொல்லி விட்டு, மனத்தில் 'உறை' கிருள் என்று ஸ்திர மாகச் சொல்வதில் நயம் இருக்கிறது.

இந்த "மனத்துறை வல்லி" எப்படிப் பட்ட அழகி தெரியுமா ?

நடக்கில் அன்னமாம்
நிற்கில்நல் வஞ்சியாம்
கிடக்கில் ஓவியப்
பாவை கிடந்ததாம்.

Koviloor Digital Library

அன்ன நடை! வஞ்சிக் கொடிபோல மேனி ஒயில்! ஓவியப் பாவை போல வனப்பு! இந்த வர்ணனை பாடலில் எப்படி வருகிறது பாருங்கள்: நடந்தால் அன்னம், நின்றால் வஞ்சிக் கொடி, சயனித்தாலோ ஓவியத்தில் பாவை சயனித்த மாதிரி!

நடக்கில் அன்னமாம்
நிற்கில்நல் வஞ்சியாம்
கிடக்கில் ஓவியப்
பாவை கிடந்ததாம்!
தடக்கை யான்சது
ரானன பாண்டிதன்
மடத்து ளாள்என்
மனத்துறை வல்லியே!

வர்ணனை எப்படி?

Koviloor Digital Library

கிழவியின் நன்கொடை!

இயற்கையில் எத்தனையோ அத்புதங்கள் மலிந்திருக்கின்றன - மனிதனுடைய அறிவையும் ஆற்றலையும் கடந்த அத்புதங்கள்.

தூக்கணங்குருவியின் கூடு ஒரு மகத்தான அத்புதம். மனிதன் கோடிக்கணக்காகப் பணம் செலவழித்து மாளிகைகள் கட்டுகிறான். காற் றோட்டம் வேண்டும் என்று சுவரெங்கும் ஜன்னல் கள் வைத்துப், பிறகு அவற்றை நன்றாய் மூடிச் சாத்தி விடவும் தவறுவதில்லை! இந்தப் படாடோ பத்தையும் தூக்கணங்குருவியின் எளிமை கலந்த அழகிய "சிற்ப - முறை"யையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

இயற்கை எப்படியோ ஒரு உள்ளுணர்ச் சியைத் தூக்கணங் குருவியினிடத்தில் அமைத் திருக்கிறது. தென்னை மரத்துக்குப் பறந்து செல் கிறது. தன்னுடைய கூர்மையான அலகினால் ஓலையின் நரம்புகளைச் சன்னம் சன்னமாகக் கிழித்து எடுத்துக் கொள்ளுகிறது. பிறகு, தென்னை மரத்தின் நீண்ட மட்டையிலோ அல்லது உடை மரத்திலோ (அதாவது கூண்டைப் பற்றிக் கொள்ளக்கூடிய விதத்தில் அமைந்த ஒரு மரத்தின் கிளையில்) தன்னுடைய 'தொங்கும் பங்களா' வை

Koviloor Digital Library

அமைத்துக் கொள்கிறது. பாஞ்ச ஜன்யத்தின் வடிவத்தில் அந்தக் கூடு, வீசும் காற்றில் அசைந்து அசைந்து ஆடுவது எவ்வளவோ அழகாயிருக்கிறது. தென்னை நரம்புகள் ஒன்ருேடொன்று பின்னி இழைக்கப்பட்டிருக்கிற நேர்த்தியைப் பார்த்தால், 'சல்லாச் சேலை' நெய்கிற சேணியன் தலைகுனிய வேண்டியதுதான்!

தூக்கணாங் குருவி தைப் பொங்கலுக்கு வீட்டை வெள்ளையடிப்பதில்லை; வெடிப்புகள் பூசுவதில்லை. ஆனாலும் காற்று, மழை, வெயில் ஆகியவற்ருேடு போராடித் தன் ஆயுளைக் காத்துக் கொள்கிறது கூடு! 'ரென்ட் கன்ட்ரோல்' கிடையாது; வீடு கிடைப்பதில் எவ்வித கஷ்டமும் இல்லை!

அதோ மேஜைமேல் இருக்கிறதே அரக்கு, அதைப்பற்றி நாம் அவ்வளவாக யோசித்துப் பார்ப்பதில்லை. காகிதக் கூட்டை ஒட்டி 'ஸீல்' வைக்கும்போது அரக்கைத் தொடுகிறோம். அவ்வளவுதான் தெரியும் நமக்கு. ஏதோ தொழிற் சாலையில் உற்பத்தியாகிற ஒரு கந்தகப் பொருள் என்று யாராவது அரக்கைப்பற்றிச் சொன்னல் நம்பத் தயார்!

செக்கச் செவேலென்று உருகி ஓடுகிற அரக்கு, இயற்கையின் இன்ெருரு அத்புதம். அரக்குப்

Koviloor Digital Library

பூச்சிகள் ஒன்றுசேர்ந்து, ஒத்துழைத்துக்கட்டும் கூட்டை — அந்த அரக்கு மாளிகையைத் - தகர்த்து நாம் வில் குத்துவதற்கு எடுத்துக் கொள்கிறோம்!

அண்ணாந்து அறையின் உத்தரத்தைப் பாருங்கள். கறையான்கள் கட்டியுள்ள அடுக்கு உப்பரிகைகள். வளைந்து நெளிந்து செல்கிறது அந்தக் கறையான் வீடு. அங்கங்கே, சமையலறை, சாப்பாட்டு அறை; ஸ்நாந அறை, பள்ளி அறை என்று அடுக்கடுக்காய் இருக்கும்போல்!

'கறையானை அப்படியே வியந்து நின்றுவிட வேண்டாம்; நான் இருக்கிறேன்' என்கிறது சுறுசுறுப்பான தேனி! மலர் மலராகச் சென்று, கொஞ்சம் கொஞ்சமாகத் தேனெடுத்து, ஒரு பெரிய கூண்டையே கட்டி முடித்துக் கடைசியில் நமக்குத் தந்து விடுகிற தேனி, இயற்கையின் இன்னொரு அத்புதம்!

தேனி இருக்கட்டும். அதோ அந்த மாடக் குழியில் பாருங்கள். சிலந்தி கூடு கட்டியிருக்கிறது. நகக் கண்ணுக்குள் பதினெட்டு முழத்தை மடித்துச் சொருகிவிடலாம் என்பார்களே, அவ்வளவு மெல்லிய நூலை அந்தச் சிலந்தி எப்படிச் செய்தது? 'டெக்ஸ்டைல் பாலிஸி' யைப்பற்றி அதற்குக் கவலையே கிடையாது. தலைமுறை தலைமுறையாக நூல் நூற்கிறது. உலகம் முடியும்

Koviloor Digital Library

வறை நூற்றுக்கொண்டேயிருக்கும். அந்த நூலைக் கொண்டு 'நூலகம்' கட்டி, வாசலிலே கட்டம் கட்டமாக அதனுடைய சிலந்தி பாஷையிலேயே 'No Admission' என்னும் எழுத்தைப் பின்னித் தொங்கவிட்டு விடுகிறது சிலந்தி !

வான்குருவியின் கூடு, வலிமையான அரக்கு, பழமையான கறையான் கூடு, தேனீ, சிலந்தியின் பாசவலை - இவை யெல்லாம் இயற்கையின் மாபெரும் அத்புதங்கள். யாராலும் செய்ய முடியாத அத்புதங்கள். ஆனால் அந்தப் பறவையும் பூச்சிகளும், ஈக்களும் இந்த அத்புதங்களை எவ்வளவு எளிதாகச் செய்துவிடுகின்றன !

வான்குருவி யின்கூடு
வல்லரக்குத் தொல்கறையான்
தேன், சிலம்பி யாவர்க்கும்
செய்யரிதால் –

மேலே பார்த்த இந்த அதிசயங்கள் எல்லாம், அவை தவிர வேறு யார்க்கும் செய்வது அரிது. அதாவது செய்ய முடியாது.

– யாம்பெரிதும்
வல்லோமே என்று
வலிமைசொல வேண்டாம்காண்.

Koviloor Digital Library

நாங்கள் ஸர்வ வல்லமை பொருந்தியவர்கள் என்று மார்தட்டுவதில் அர்த்தம் இல்லை.

எல்லார்க்கும் ஒவ்வொன்று
எளிது.

உலகத்தில் எல்லார்க்கும் வல்லமை உண்டு. ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொன்று எளிதாகச் செய்ய முடியும்.

வான்குருவி யின்கூடு
வல்லரக்குத் தொல்கறையான்
தேன், சிலம்பி யாவர்க்கும்
செய்யரிதால் – யாம்பெரிதும்
வல்லோமே என்று
வலிமைசொல வேண்டாம்காண்
எல்லார்க்கும் ஒவ்வொன்று
எளிது.

ஆணவம் பிடித்த பிரகிருதிகளைப் பார்த்து வலிமை சொலவேண்டாம் என்று சொல்லவந்த ஔவையார், 'வேண்டாங் காண்' என்று உணர்ச்சி ததும்பக் கூறியதில் கவிதை எவ்வளவு அழுத்தம் பெற்றுவிட்டது பாருங்கள்.

கன்னித் தமிழுக்குக் கன்னிக் கிழவியின் நன்கொடை இந்தப்பாடல்; இதில் கர்வத்துக்கும் ஒரு நல்ல கொடை கொடுத்திருக்கிறார் ஔவையார்!

Koviloor Digital Library

நிலவில் மலரும் தாமரை !

ஆமாம்; நிலவிலேதான் மலரும் அந்தத் தாமரை! தாமரை என்று ஒருமையாகச் சொன்னேன். தாமரைகள் என்று சொல்லவேண்டும் பன்மையாக!

ஆமாம். நிலவிலே மலர்கிற அந்தத் தாமரைகள் ஒன்றிரண்டல்ல;-பல, சாலப் பல!

எங்கே இருக்கின்றன அந்த அதிசயமான தாமரை மலர்கள் என்று கேட்கிறோம் அல்லவா? புலவர் பதில் சொல்கிறார்!

அநபாய மகாராஜன் இருக்கிறானே அவனுடைய ராஜ்யத்தில்தான் இந்தத் தாமரை மலர்கள் இருக்கின்றன.

பாடலைப் பார்க்கலாம்:

இகல்மதமால் யானை
அநபாயன் எங்கோன்
முகமதியின் மூரல்
நிலவால் —

இகல் என்றால் வெற்றி. எங்கோன்—எம் அரசன்.

Koviloor Digital Library

அநபாய சக்ரவர்த்தி எப்படிப்பட்டவன்? வெற்றியுடைய மதயானைகள் - கரிய மதயானைகள் - அநேகம் அவனுக்கு உண்டு. அவனுடைய முகம் மதியைப் போன்று பரந்தது; மதியைப்போன்று ஒளியுடையது; மதியைப்போன்று தண்மையுடையது, அழகுடையது. எனவே அந்த முகமதியில் புன்னகை தவழும்போது நிலவு வீசுகிறது என்று சொன்னால் முற்றிலும் உண்மை! அந்த நிலவில்,

இகல்மதமால் யானை
அநபாயன் எங்கோன்
முகமதியின் மூரல்
நிலவால்—நகமலர்வ
செங்கயற்கண் நல்லார்
திருமருவு வாள்வதன

அந்த அநபாயனுடைய புன்முறுவலாகிய நிலவில் மலர்கின்றன. எவை? செங்கயற்கண் நல்லார் — செவ்வரி படர்ந்தனவும் கயல்போன்று பிறழ்கின்றனவுமாகிய கண்களையுடைய பெண்களின், திருமருவு — லக்ஷ்மிகரமான, வாள்வதன — ஒளி பொருந்திய முகமாகிய,

பங்கயங்கள் சாலப்
பல

Koviloor Digital Library

அந்தப் பெண்களுடைய முகமாகிய தாமரைகள் மிகப் பல. (அந்தத் தாமரைகளில் லக்ஷ்மியும் வீற்றிருக்கிருள் !)

இகல்மதமால் யானை
அநபாயன் எங்கோன்
முகமதியின் மூரல்
நிலவால்—நகமலர்வ
செங்கயற்கண் நல்லார்
திருமருவு வாள்வதன
பங்கயங்கள் சாலப்
பல.

ஸூர்யோதயத்தில் மலர்கிற தாமரைகளையே கண்டுள்ள நமக்கு, நிலவிலே மலர்கிற தாமரைகளை வெகு ஸாமர்த்தியமாக அறிமுகம் செய்து வைத்து விட்டார் புலவர் !

Koviloor Digital Library

கவிதை - நாடகம்

இடம்: ஆறை நகர்.
காலம்: வாணபூபதியின் ஆட்சி.
காட்சி: நகரத்து வீதி.

நாடகத்தைப் பாருங்கள் :—

அலங்கரிக்கப்பட்ட ரதங்கள் வருகின்றன; அவற்றை இழுத்துக்கொண்டு வருகின்றன நீண்ட பிடரிமயிர் தொங்கும் குதிரைகள்! இதோ கம்பிரமான நடைபோட்டு வருகின்றன யானைகள்.

இந்தப் படைகளுக்கு மத்தியிலே சிற்றரசன் போல் தோற்றமளிக்கும் அந்த மன்னன் யார்?

இந்த விமரிசையான ஊர்வலம் தெருக் கோடியை எட்டி மறுபக்கம் திரும்புகிறது. இதோ எதிர்ப்படுகிருன் பாணன் ஒருவன், கையில் யாழுடன்!

எதிரே தோன்றுகிற காட்சியைப் பார்த்துப் பாணனுக்கு ஒரே பிரமிப்பு. ஆறை நகரில் இப்படி ஒரு மன்னன் என்ன காரணத்துக்காக வரவேண்டும் என்று யோசிக்கிருன்.

"ஓ, விஷயம் புரிந்துவிட்டது. இந்தச் சிற்றரசன் மகதேவ வாண பூபதிக்குக் கப்பம செலுத்துவதற்காக வருகிருன்" என்று தீர்மானிக்கிருன்.

Koviloor Digital Library

தேரு ஊப்புரவி வார ணத்தொகுதி
திரைகள் கொண்டுவரும் மன்ன!

'தேர், புரவி, யானை முதலியவற்றைக் கப்பமாக (திறை - கப்பம்) கொண்டுவரும் மன்னனே" - கேட்கிறான் பாணன்.

தேரு ஊப்புரவி வார ணத்தொகுதி
திறைகள் கொண்டுவரும் மன்ன! நின்
தேசமேதுனது நாம மேதுபுகல்

புகல் - சொல்லும். நின் தேசம் ஏது? உனது நாமம் - பெயர் ஏது?

தேரு ஊப்புரவி வார ணத்தொகுதி
திறைகள் கொண்டுவரு மன்னநின்
தேச மேதுனது நாம மேதுபுகல்!

'மன்னன்' பதில் சொல்லுகிறான் :—

செங்கை யாழ்தடவு பாணகேள்!

செம்மையான - இசையில் செம்மை பெற்ற - கையினால் யாழைத் தடவுகிற பாணரே கேளும்.

செங்கை யாழ்தடவு பாணகேள்
வாரும் ஒத்தகுடி நீரும் நாமும்!

"வாருமையா, இப்படி, பக்கத்திலே. ஒதுங்கி நிற்கிறீரே, நீரும் நாமும் ஒரே குடிப் பிறப்புத்தான்"

Koviloor Digital Library

செங்கை யாழ்தடவு பாணகேள்
வாரும் ஒத்தகுடி நீரும் நாமும், மக
தேசன் ஆறைநகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந்த ளித்தவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான்!

"வாணபூபதி இருக்கிறாரே, உமக்கும் எனக்கும் நம் எல்லாருக்கும் அரசர், அவர் மகிழ்ந்து கொடுத்த பரிசுகளை வாங்கிக்கொண்டு திரும்புகிற புலவனையா நான்."

இப்பொழுதுதான் 'யாழ்தடவு' பாணனுக்கு விஷயம் புரிகிறது, நமக்கு எதிரே வந்தவர் கப்பம் கொண்டுவருகிற சிற்றரசனில்லை; புலவன்தான் என்று! அந்தப் பரிசுகளை ஏற இறங்கப் பார்க்கிறான் பாணன்.

"என்ன பாணரே பார்க்கிறீர்? நீரும் இந்தப் பரிசுகள் பெற முடியும்."

நீரும் இப்பரிசு பெற்று மீளவர
வாரும்; ஏகும்!

"நீர் போனாலும் இந்தப் பரிசு உண்டு. ஏகும் ஐயா"

பாணன் அந்தக் கிறக்கத்திலிருந்து தெளியவில்லை.

Koviloor Digital Library

"என்னையா இன்னும் முழிக்கிறீர் பாதை தெரியாதா உமக்கு? சொல்கிறேன் கேளும்."

அவன் முன்றில்வாய்

வாணபூபதியினுடைய முற்றத்தில்

அவன் முன்றில்வாய்
நித்தி லச்சிகர மாட மாளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்.

அவனுடைய முற்றத்தில் முத்துச் சிகரம்கொண்ட மாடங்கள் மாளிகைகள் பார்க்கலாம். அதைச் சுற்றி, கோபுரங்கள் நெருங்கிக்கொண்டு நிற்கும்.

ஆரு நிற்கும்;

ஆத்தி நிற்கும்.

உயர் வேம்பு நிற்கும்; வளர்
பனையு நிற்கும்; அதன் அருகிலே
அரசு நிற்கும்.

வாணபூபதியினுடைய முற்றத்தை வர்ணிக்கிற நேர்த்தியைக் கவனிக்கவேண்டும். ஆத்திமரமும் வேப்பமரமும், பனைமரமும் நிற்கும். அருகில் அரச மரமும் நிற்கும் என்பதுபோல பொருள் தெரிகிறது. உண்மையில் உட்பொருள் ஒன்று இருக்கிறது.

ஆர் என்றால் ஆத்தி. இந்த இடத்தில் ஆகு பெயராக ஆத்திமாலை சூடிய சோழனைக் குறிக்கும்.

Koviloor Digital Library

வேம்பு - வேப்பமாலை சூடிய பாண்டியன். பனை - பனைமாலை தரித்த சேரன்.

ஆரு நிற்குமுயர் வேம்பு நிற்கும்வளர்
பனையு நிற்குமதன் அருகிலே
அரசு நிற்கும்.

பனை (சேரன்) நிற்கும். அருகிலே அரசு நிற்கும், அதாவது மற்ற அரசர்கள் நிற்பார்கள்.

அரசு நிற்கும்அர சைச்சு மந்தசில
அத்தி நிற்கும்.

அந்த அரசர்களைச் சுமந்துவந்த அத்தி (அத்தி என்றால் அத்திமரம் இல்லை; யானை) நிற்கும்.

அடையாளமே.

இவைதான் அடையாளம், நமது சக்கரவர்த்தியின் இருக்கையைத் தெரிந்துகொள்ள.

இனிப் பாட்டு முழுவதையும் பார்க்கலாம்.

தெருவைப்புரவி வார ணத்தொகுதி
நிறைகள் கொண்டுவரு மன்னநின்
தேச மேதுனது நாம மேதுபுகல்
செங்கை யாழ்தடவு பாணகேள்

Koviloor Digital Library

வாரும் ஒத்தகுடி நீரு நாமுமக
தேசன் ஆறைநகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந்த ளிக்கவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான்
நீரும் இப்பரிசு பெற்று மீளவர
லாகும் ஏகுமவன் முன்றில்வாய்
நித்தி லச்சிகர மாட மாளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்
ஆரு நிற்குமுயர் வேப்பு நிற்கும்வளர்
பனையு நிற்குமதன் அருகிலே
அரசு நிற்குமர சைச்சு மந்தசில
அத்தி நிற்கும்அடை யாளமே!

சேர சோழ பாண்டியராகிய மூவேந்தரும், மற்றும் அரசர்களும் பணிந்து கப்பம் செலுத்தினர்கள் என்று சொல்லும்படியாக அவ்வளவு உயர்வுடன் அரசாண்டான் வாணபூபதி. அவனுடைய கலையார்வம் மகத்தானது. தேரும் புரவியும் யானையுங் கூடப் பரிசாக அளிப்பான் கலைஞர்களுக்கு - என்பதுதான் பாடலின் விஷயம். அதை இப்படி ஒரு நாடகமாகக் கவிதையிலே புனைந்துவிட்டார் புலவர். 'தேருமாப்புரவி வாரணத்தொகுதி' என்று இசை துள்ளும்போது ரதங்களும் பரிகளும் ஓடி வருகிற தாளம் செவியிலே கேட்கிறது. சம்பா

Koviloor Digital Library

ஷணுக்குத் தக்கபடி உணர்ச்சியின் சாயலை வேறு படுத்திக் காட்டுகிற முறையில் அங்கங்கே சீர்கள் பிரிந்து அமைந்திருக்கின்றன.

ஒரு பெரிய நாடகம் பாடலிலே இருக்கிறது. அத்புதமான நாடகம். அத்புதமான பாடல்.

---

* "மகதேசன்" என்பது "மகதேவன்" என்றும் ஒரு பாடம்.

Koviloor Digital Library

கடலும் கரையும்

திருச்செந்தூருக்குப் போகிற பாதையிலே இருக்கிறது காயல்பட்டினம். சில வருஷங்களுக்கு முன் வரை அது ஒரு முக்ய துறைமுகப்பட்டினமாயிருந்தது. அந்தஊரில் சீதக்காதி என்று ஒரு முகம்மதிய வள்ளல் இருந்தார். அவரைப்பற்றிய சில பாடல்கள் அருமையான வாய்ப்புடன் விளங்குகின்றன.

சீதக்காதிக்குக் கொளும்பில் பிரமாதமான வியாபாரம். நல்ல செல்வம், நல்ல மனம், எனவே நல்ல புகழ்.

தரைகண்ட மட்டும் படர்ந்து அண்ட கோளமும்
தாவிளங்கும்
உரைகண்ட கீர்த்தி பெறுஞ்சீதக் காதி

எப்படிப்பட்ட கீர்த்தியுடையவன் சீதக்காதி, தெரியுமா? தரை காணப்படுகிற மட்டும் பரந்து, அண்டகோளமும் தாவி, எங்கும் பேசப்படுகிற புகழை உடையவன் அவன்!

சீதக்காதியிடம் காதல் கொண்டுவிட்ட பெண்ணொருத்தி கடற்கரையிலே நின்று கொண்டு பாடுகிறதாகப் பாடலின் சாயல்.

பௌர்ணமி சந்திரன், நிலவின் அலைகளை வீசுகிறது. நீலக் கடல் தன் பேரலைகளை முழக்கி

Koviloor Digital Library

எழுந்து கரையிலே வந்து திண்திண் என்று மோதிச் சரிகிறது. உள்ளத்தின் ஆசையாகிய கடலும் அந்த ரம்யமான நேரத்தில் அலைகளை வீசிச் சாய்கிறது.

அதோ நிலவின் ஒளியில் கடலின் பரப்பிலே தெரிவது சீதக்காதியின் கப்பல் தான். உலகினைப் போர்த்தி நிற்கிற இந்தக் கடலின்மேல் தனது கப்பலைச் செலுத்திக் கடலைக் கரைகண்டவன் சீதக்காதி! அப்படிப்பட்டவன்,

உலகினில் வெண்
திரைகண்டெ ழுங்கடல் மீதேதன் வங்கத்தைச்
செல்லவிட்டுக்
கரைகண்டவன்.

(வங்கம் - கப்பல்) இப்படியாகக் கடலின் கரையைக் கண்டவன்,

கரைகண்ட வன்இனம் கணன்என் ஆசைக்
கடற்கரையே!

(இனம் - இன்னம்) இன்னும் அவன் என் ஆசைக் கடலின் கரையை - அந்த எல்லையைக் கண்டாவில்லையே. (இந்தக் கடலின் எல்லையைத் தானே கண்டான்)

இல்லையே என்ற 'ஏ' காரத்தின் உணர்ச்சிச் சாயல்தான், கரையே என்று முடிகிறது பாடலில். இது ஒரு நல்ல மாற்றுவைப்பு உத்தி.

Koviloor Digital Library

பாடலை ஒரு முறை முழுவடிவில் பார்க்கவேண்டும்.

தரைகண்ட மட்டும் படர்ந்தண்ட கோளமும்
தாவியெங்கும்
உரைகண்ட கீர்த்தி பெறுஞ்சீதக் காதி
உலகினில்வெண்
திரைகண்டெ டுங்கடல் மீதேதன் வங்கத்தைச்
செல்லவிட்டுக்
கரைகண்ட வன்இனம் காணன் என் ஆசைக்
கடற்கரையே !

Koviloor Digital Library

பனங்கிழங்கு

பாண்டியனுடைய சபையிலே ஒரு நாள் ரஸமான ஒரு கேள்வி எழுகிறது. அதாவது நாரையினுடைய மூக்கு இருக்கிறதே நீளமான கூரிய மூக்கு, அதற்கு உவமையாக எதைச் சொல்லலாம் என்று! சபையில் இருந்த புலவர்கள் எவருக்கும் உவமை தோன்றவில்லை.

சபை கலைந்து எழுந்தபோது பாண்டியன் மிக்க யோசனையோடு அகல்கிறான்.

* * *

நல்ல பௌர்ணமி நிலவு. அந்த நிலவிலே வானத்தில் நாரைகள் பத்தி பத்தியாகப் பறந்து சென்று கொண்டிருக்கின்றன. நகர சோதனைக்காகச் செல்கிற அரசன் அந்த நாரைக் கூட்டங்களைப் பார்த்து ஒரேபடியாக அதிசயிக்கிறான். அத்தனை புலவர்களின் கூட்டத்திலும் இந்த மூக்கிற்கு உவமை சொல்கிற ஒருவரைக் காணோமே என்று யோசனை செய்துகொண்டே அந்தப் பாழும் சத்திரத்தை யொட்டி நடந்து செல்கிறான். அப்பொழுது,

நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்.....................................

Koviloor Digital Library

என்று கேட்கிறது, நலிந்தகுரலில். பாண்டியன் திடுக்கிட்டு விட்டான், அந்த உவமையிலே.

'பனங்கிழங்கை இரண்டாக வகுந்ததுபோல கூரிய வாயை உடைய நாரையே'! வியப்பினால் உடல் சிலிர்க்கிறது. மறுகணம் அந்தக் குரலின் ஏழைமை நெஞ்சைத் தீய்க்கிறது. பாடலைக் கூர்ந்து கேட்கிறான்.

தூரத்து ஊரிலே உள்ள தனது மனைவிக்குச் செய்தி சொல்லியனுப்புகிறார் புலவர், அந்த நாரைகளிடம்.

நாராய் நாராய் செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன,
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயும்நின் மனைவியும் தென்திசைக் குமரி
ஆடி வடதிசைக் கேகுவி ராயின்.

ஏ நாரையே! நீயும் உன்னுடைய மனைவியும் தெற்கே கன்யாகுமரியில் தீர்த்தமாடிவிட்டு வடக்கே போகிறீர்கள் போலும். அப்படியானால்,

எம்மூர்ச் சத்திமுத் தவாவியுள் தங்கி

எங்களூர் சத்திமுத்தத்தடாகத்தில் கொஞ்சம் இறங்குங்கள், தயவு செய்து. அங்கே, அதன் கரையிலே,

Koviloor Digital Library

நனைசுவர்க் கூரை

அந்தக் கரையிலே ஒரு சிறு கூரை - மண்சுவர்- மழையிலே நனையும். இது தான் என்னுடைய வீட்டுக்கு அடையாளம். அந்தக் கூரையிலே,

கனைகுரல் பல்லி
பாடுபார்த்து இருக்கும்எம் மனைவியைக் கண்டு

'கணவன் மதுரைக்குப் போனானே; இந்த வறுமை தீருவதற்கு ஏதாவது வழியுடன் வருவானா' என்று பல்லி சொல்லைப் பார்த்துக்கொண்டிருப்பாள் என் மனைவி. அவளைக் கண்டு,

எங்கோன் மாறன் வழுதி கூடலில்

எங்கள் அரசனான பாண்டியனுடைய மதுரையில் (இந்தக் கட்டத்தில் மறைவிலே நின்று பாடலைக் கேட்டுக்கொண்டிருக்கிற பாண்டியனுடைய மனநிலையை யூகித்துப் பார்க்கவேண்டும்.)

எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை இன்றி வாடையில் மெலிந்து

உடலில் சரியானபடி போர்வை 'கீர்வை' இல்லை. வாடை உடலைக் கொடுக்குகிறது.

கையது கொண்டு மெய்யது பொத்தி

Koviloor Digital Library

கைதான் போர்வை. அதைக்கொண்டு மேனியைப் போர்த்துக்கொண்டு,

காலது கொண்டு மேலது தழீஇப்

காலைக் குத்துற வைத்து உட்கார்ந்து, உடம்பை அணைத்துக்கொண்டு,

பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்

பெட்டிப்பாம்புபோல சுருட்டி மடக்கிக் கிடந்து கொண்டு பெருமூச்சு விடுகிற,

ஏழை யாளனைக் கண்டனம் எனுமே.

ஏழையாகிய என்னைப் பார்த்தேன் எனுமே - என்று அவளிடம் (மனைவியிடம்) சொல்லுங்கள்.

நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
நீயுநின் மனைவியும் தென்திசைக் குமரி
ஆடி வடதிசைக் கேகுவி ராயின்
எம்மூர்ச் சத்திமுத் தவாவியுள் தங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையில் மெலிந்து

Koviloor Digital Library

கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே!

தான் எதிர்பார்த்த உவமை கிடைத்து விட்டது என்று அபாரமாக மகிழ்ச்சி அடைந்த பாண்டியனைப் பாடலின் பின்அடிகள் அளவிலாத துன்பத்தில் ஆழ்த்துகின்றன. வாழ்க்கையின் சோகத்தை உதிரத்தினால் சித்திரித்தது போலப் பாடல் பாண்டியனுடைய இதயத்தில் பதிகிறது. உடனே சத்திரத்துக்குள் சென்று புலவரை சந்திக்கிறான்.

புலவரின் வறுமை அன்றோடு நீங்குகிறது. பொருட் செல்வத்தோடு புகழ்ச் செல்வமும் அவருக்குக் கிடைக்கிறது.

சத்திமுத்தப் புலவரின் வறுமை மறைந்து விட்டது. புலவரும் மறைந்து விட்டார். ஆனால் இந்தப் பாடல் என்றும் மறையாது.

தமிழுக்குக் கிடைத்த ஒரு சிரஞ்சீவிக் கவிதை இது!

Koviloor Digital Library

தயவுசெய்து பயப்படுங்கள்!

'எதற்கும் அஞ்சவேண்டாம்' என்று நிமிர்ந்து நிற்கும் நாளிலே, 'எதற்கும் அஞ்சோம்' என்று தமிழர் மார்தட்டி நிற்கிற பொழுது,

உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.

என்று நவயுகத்தின் சங்கநாதம் முழங்கும்போது, 'தயவு செய்து அஞ்சுங்கள்' என்று அமைதியான முறையில் புத்திமதி சொல்கிறார் — யார்? - திருவள்வர்.

எதற்கு? யாருக்கு? - அஞ்சவேண்டும்? பகையினுக்கா? பகைவருக்கா?

இல்லை. பின்?

வாள்போல் பகைவரை அஞ்சற்க

வாளைப்போல் உறையிலிருந்து வெளியே வந்து, குத்திவிடுவேன் என்று நேராக நிற்கிற எதிரிக்கு நீ பயப்படாதே. அது வீரம்! ஆனால் தயவு செய்து,

அஞ்சுக

கேள்போல் பகைவர் தொடர்பு

Koviloor Digital Library

சிநேகிதன்போல இருந்துகொண்டு குரல் வளையை நெரிக்கிறானே அந்தப் பகைவனுடைய நட்புக்கு நீ பயப்படு.

வாள்போல் பகைவரை
அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர்
தொடர்பு!

Koviloor Digital Library

இசைக்கு ஆடும் பெம்மான்!

திருநெல்வேலிப் பக்கங்களிலே 'எசக்காடும் பெருமா பிள்ளை' என்ற பெயர் சர்வ சாதாரணம். இந்தப் பெயரின் கொச்சை வடிவை மறந்துவிட்டு, வார்த்தைகளை கவனிக்கவேண்டும். 'இசைக்கு ஆடும் பெருமான்' என்பதே அந்தப் பெயர். என்ன அழகு பாருங்கள்! அந்தப் பெயரிலேயே இசை இருக்கிறது!

இசைக்கு ஆடும பெம்மானைப்பற்றிய ஒரு மிக மிகப் பழம்பாடல்; அந்தப் பாடலும் இசைப் பண்புடன் ஒலிக்கிறது. கேளுங்கள் :—

பூண்ட பறையறைய
  பூதம் மருள

சிவபெருமானுடைய நடன அரங்கு மயானக் காடு. அங்கே பறை கொட்டுகிறது. எப்படி? பூதமே மருளும்படியாக (மருளுதல் - அஞ்சுதல்)

பூண்ட பறையறைய
  பூதம் மருள
நீண்ட சடையான்
  ஆடுமே.

Koviloor Digital Library

நீஇஇஇளமான சடை. அது தொங்கி வீச ஆடு கிறான் இறைவன்.

பூண்ட பறையறைய
  பூதம் மருள
நீண்ட சடையான்
  ஆடுமே!
நீண்ட சடையான்
  ஆடும் என்ப
மாண்ட சாயல்
  மலைமகள் காணவே! காணவே!

மாட்சிபொருந்திய சாயலுடைய மலைமகள் இருக் கிறாளே, பார்வதி, அவள் இந்த நடனத்தைக் கண்டு சொக்குகிறாள்!

'மாண்ட' என்ற வார்த்தைக்கு மாண்பு பொருந் திய என்று பொருள். இந்த அர்த்தத்தில் இவ் வார்த்தை ஒரு பழைய பிரயோகம். பாடலின் தொன்மைக்கு இது ஒரு உட்சான்று.

அந்த நடனம் எப்படி இருக்கிறது.

வரிகொள் அரவு
  மதியும் சுழல

வரிவரியாகக் கிடக்கிற பாம்பு; பிறைச் சந்திரன். இவை சுழலவும்,

Koviloor Digital Library

கரிகால் ஏந்தி
   ஆடுமே!
கரிகால் ஏந்தி
   ஆடும் இறைவன்;
புரிபுன் சடைமேல்
   புனலும் பிறழுவே!

அந்த நடனத்தின் துள்ளலில் இசைந்து, கங்கையின் புனலும் சடையிலே பிறழுகிறதாம்!

என்ன நடனம்! என்ன நடனம்!!

பூண்ட பறையறையப்
   பூதம் மருள
நீண்ட சடையான்
   ஆடுமே!
நீண்ட சடையான்
   ஆடும் என்ப
மாண்ட சாயல்
   மலைமகள் காணவே காணவே!

வரிகொள் அரவு
   மதியும் சுழலக்
கரிகால் ஏந்தி
   ஆடுமே!

Koviloor Digital Library

கரிகால் எந்தி
ஆடும் இறைவன்
புரிபுன் சடைமேல்
புனலும் பிறழுவே!

இந்த இரண்டு பாடல்களின் இசைச் சிறப்பும் மிகமிக அருமையானது. கட்டுக்கோப்பும், வார்த்தைகளின் அமைப்பும் பிரமாதம்.

தொல்காப்பியருக்கும் முந்திய காலத்துப் பாடல் இது!

Koviloor Digital Library

முத்துக்கள் சிந்திவிடுமோ!

திருநெல்வேலி வடிவாம்பிகையைப் பற்றிய ஒரு அழகான பாடல். பலபட்டடைச் சொக்க நாதப் புலவர் பாடியது.

"முத்துப் பந்தலில் மெல்லிய பஞ்சணை மெத்தையிலே அவரோடு - வேய்முத்தீச்வரரோடு நீ உட்கார்ந்திருக்கும்போது, என்னுடைய கஷ்டங்களையெல்லாம் கொஞ்சம் அவருக்கு எடுத்துச் சொல்லக்கூடாதா? அப்படியே உன்னுடைய வாயிலிருந்து முத்துக்கள் உதிர்ந்தாவிடும்? ஏன் இப்படி மௌனமாய் இருக்கிறாய்?" என்று அம்பிகையைக் கேட்கிறார் பக்தர் - வக்கீலைக் கேட்கிற கட்சிக் காரரைப்போல!

ஆய்முத்துப் பந்தரில் மெல்லணை மீதுன் அருகிருந்து
நீமுத்தம் தாவென்று அவர்கொஞ்சும் வேளையில்

உன்னோடு பஞ்சணை மெத்தையில் அமர்ந்து 'முத்தந்தா' என்று அவர் கொஞ்சுகிறபோது,

நித்தம் நித்தம்
வேய்முத்த ரோடுஎன் குறைகள் எல்லாம் மெல்ல
மெல்லச் சொன்னால்

தினம் கொஞ்சமாக, மெள்ள மெள்ள, எனது கஷ்டங்களை நீ அவருக்கு எடுத்துச் சொன்னால்,

Koviloor Digital Library

வாய்முத்தம் சிந்திவிடுமோ நெல்வேலி
வடிவன்னையே!

உன்னுடைய வாயிலிருந்து முத்துக்கள் அப்படியே உதிர்ந்துவிடுமோ, கேட்கிறேன்!

ஆய்முத்துப் பந்தரில் மெல்லணை மீதுன்
அருகிருந்து
நீமுத்தம் தாவென்று அவர்கொஞ்சும் வேளையில்
நித்தநித்தம்
வேய்முத்த ரோடென் குறைகளெல்லாம் மெல்லமெல்
லச்சொன்னல்
வாய்முத்தம் சிந்தி விடுமோநெல் வேலிவடி
வன்னையே!

சாதாரணமாக 'முத்து உதிர்ந்துவிடுமோ' என்று சொல்வது ஒரு பேச்சு - வழக்கு. இது உணர்ச்சியை நன்ருகக் காட்டுகிற முறையில் இந்தப் பாடலில் ஆளப்பட்டிருக்கிறது. இன்னொரு நயம், 'முத்து' என்று சொல்வதில் 'கடல் முத்து' 'வாய் முத்தம்' என்று இரண்டு பொருள் தொனிக்கும் அல்லவா?

நயமான பாடல்!

Koviloor Digital Library

உடைந்த வளையல்

காதல-துறையில், வளை நெகிழ்ந்து கீழே விழுந்து உடையும்படியாகக் காதலிகள் காதலர் நினைவினால் உடல் மெலிகிறார்கள் என்று சொல்வது ஒரு தமிழ்-மரபு. இது சம்பந்தமான பாடல்கள் அநேகம். 'இவன் என் வளைகளைக் கவர்ந்தான்' என்று காதலி காதலனைக் குறிப்பிட்டு ஆவலாதி சொல்கிற பாவனையிலெல்லாம் பாடல்கள் இருக்கின்றன. இப்பொழுது, வளையலை வைத்துக்கொண்டு ஒரு புதிய வேலை செய்திருக்கிற புலமையைப் பார்க்கலாம்.

திடீரென்று காதலியிடம் வந்து "நான் ஊருக்குப் போகிறேன்; பயணம்" என்று சொன்னான் காதலன். அவ்வளவுதான். (ஆவி திறந்துவிடப்பட்ட 'பலூன்' மாதிரி) உடம்பு மெலிந்து வளையல் சடசடவென்று கீழே விழுந்து உடைந்துவிடுகிறது! பாதி வளையல் உடைந்த தருணத்தில், "இல்லையம்மா, போகவில்லை" என்று சொல்கிறான் காதலன். அவ்வளவுதான். (பலூனில் அளவுக்கு மீறிக் காற்றை ஊதிவிட்டால் எப்படியோ அப்படியாக) உடல் பூரிப்பினால் 'பட்பட்' என்று பாக்கிப் பாதி வளையலும் உடைந்துவிடுகின்றனவாம்!

Koviloor Digital Library

பாட்டைப் பாருங்கள் :—

“நங்கை பயணம்
நமக்கெ”ன் றுரைத்தளவில்

“அம்மா, நமக்குப் பயணம்-(பிரயாணம் செல்கிறேன்)” என்று சொன்ன மாத்திரத்தில்,

“நங்கை பயணம்
நமக்கெ”ன் றுரைத்தளவில்
அங்கம் பசலைநிறம்
ஆனதே!

அவ்வளவுதான்; உடம்பெல்லாம் பச்சை நிறமாகிவிட்டது. ‘பச்சை நோய்’ என்கிற காதலின் பிரிவாற்றுமை-நோய்! அதுமட்டுமா!

—செங்கை
வளை நெகிழ

செங்கையானது மெலிந்து வளை நெகிழ்ந்து விடுகிறது. இப்படிப் பாதி வளை கீழே விழுந்து உடைகிற சமயத்தில்,

—செங்கை
வளைநெகிழப் பாதி
“மறுத்தேன்” என்றேத

Koviloor Digital Library

" இல்லை ; அந்தச் செய்திக்கு ஒரு மறுப்பு-அதாவது நான் போகவில்லை" என்று காதலன் சொன்னானே இல்லையோ,

உளநெகிழப் பாதி
உடைந்து.

உளம் நெகிழ்ந்து பாக்கிப் பாதி வளையும் உடைந்தன. (உடலின் பூரிப்பினால் கை விம்மி வளையல்கள் உடைந்துவிட்டன!)

நெகிழ்தல் என்றால் கட்டுத் தளர்தல் என்று பொருள். உள்ளம் இன்பத்தினால் கரை உடைந்து பொங்குவதையும் நெகிழ்தல் என்று சொல்லுதல் பொருந்தும்.

"உடைந்து" என்ற சொல்லை "ஆனதே" என்பதோடு கூட்டி, வாக்கியத்தை முடிக்கலாம். "பாதி உடைந்து நெகிழ உள" என்று பொருள் சொல்பவரும் உண்டு; அதாவது 'உள' என்ற வார்த்தைக்கு உள்ளன என்று பொருள்கொண்டு.

பாட்டுக்களைத் திருத்துவது சம்பந்தமாய் உடன்பாடு உள்ளவர்கள், 'உடைந்து' என்பதை 'உடைந்த' என்று வைத்துக்கொண்டு, 'உடைந்தன' என்று பாட்டை முடித்துவிடலாம். அந்த

Koviloor Digital Library

முடிவு வாசிப்பவரின் மனநிலையைப் பொறுத்தது என்று கூறி முடிக்கிறேன்.

மொத்தத்தில், பாட்டின் கருத்து மிக நன்று யிருக்கிறது.

நங்கை பயணம்
    நமக்கென் றுரைத்தளவில்
அங்கம் பசலைநிறம்
    ஆனதே—செங்கை
வளைநெகிழப் பாதி
    மறுத்தேன் என்றோத
உளநெகிழப் பாதி
    உடைந்து.

Koviloor Digital Library

பாடுங்கள் பாடுங்கள் பாடுங்கள்!

தொண்டை மன்னனைப்பற்றிய ஒரு பாடலில் மேனாட்டுக் கவிதைகளில் காண்கிற மீட்டுரைத்தல் (Repetition) என்ற உத்தி மிக நன்றாக ஆளப்பட்டிருக்கிறது.

பாட்டைப் பார்க்கலாம்.

தொண்டை மன்னனுடைய குடையைப் பற்றி - வெண்கொற்றக் குடையைப்பற்றி - ப் புலவர் மிகவும் சாமர்த்தியமாகப் பேசுகிறார். எப்படி?

குடையின் பிரகாசத்தைப் பார்த்தால் அது சூரியனுக்கு ஒப்பானது. ஆனால் அதன் குளிர்ச்சியோ சந்திரனைப் போன்றது!

மன்னன் சூரியனைப்போன்று கீர்த்தியும் சந்திரனைப்போன்று தண்மையும் (அருளும்) உடையவன் என்று கருத்து.

"புலவர்களே. பாடுங்கள் அந்தக் குடையினை. பாடுங்கள், பாடுங்கள், பாடுங்கள், பாடுங்கள்" என்று முக்காலும் மூன்று தரத்துக்கு ஒரு தரம் அதிகமாகவே சொல்கிறார் புலவர்!

பாடுகோ பாடுகோ
பாடுகோ பாடுகோ.

Koviloor Digital Library

பாட்டில் களிப்பு எப்படிப் பொங்கி வருகிறது பாருங்கள்.

பாவீற்றிருந்த
புலவீர்காள் பாடுகோ.

பாடுங்கள். வேறு எதற்குத்தான் பிறந்தீர்கள், இதைப் பாடுங்கள்.

ஞாயிற்ற ஒளியான்
மதிநிழற்றே தொண்டையார்
கோவீற் றிருந்த
குடை.

தொண்டையர்கோன் எந்தக் குடையின்கீழ் உட்கார்ந்திருக்கிறுனே அது, சூரியனுடைய பிரகாசத்தையும் சந்திரனுடைய குளிர்ச்சியையும் உடையது. இதைப் பாடுங்கள், பாடுங்கள், பாடுங்கள், பாடுங்கள்.

பாடுகோ பாடுகோ
பாடுகோ பாடுகோ
பாவிற் றிருந்த
புலவிர்காள் பாடுகோ
ஞாயிற் றுளியான்
மதிநிழற்றே தொண்டையார்
கோவிற் றிருந்த
குடை.

Koviloor Digital Library

என்ன சோகம்!

ஒரு நாயகிக்குத் தனது நாயகனுடைய நல்ல மனமும், அன்பான வார்த்தையுமே பெரிய செல்வங்களாகத் தோன்றுவது இயல்பு. தன் நாயகன் வேறொரு பெண்ணின் தொடர்பில் சிக்கிவிட்டான் என்றால் அவளுடைய உள்ளம் படுகிற வேதனை சொலலி முடியாது.

மாகுன்று அனையபொற் றோளான்
　　வழுதிமன் வான்கரும்பின்
பாகொன்று சொல்லியைப் பார்த்தென்னைப்
　　பார்த்திலன்

அயன்றைச் சடையனைப் பற்றிய பாடல். பெரிய மலை (மா குன்று) போன்ற தோளையுடையவன்.

வானத்திலே விளைந்த கரும்பின் பாகுபோல சொல்லையுடையவளின் ஆசையில் பட்டான்.

வான்கரும்பின்
பாகொன்று சொல்லியைப் பார்த்துஎன்னைப்
பார்த்திலன்.

அதனால் என்னைப் புறக்கணித்தான். ['வான் கரும்பு' என்று சொல்லுவதில் ஒரு வஞ்சகை

Koviloor Digital Library

(irony) இருக்கிறது. "சொல்லி" என்று கூறுவதில் கபடம் உடையவள் - மனத்தில் வேறுவிதம் சொல்லில் மட்டும் தித்திப்பு - என்று தொனிப் பொருள்!]

பறவைகள் பறந்து செல்கின்றன. அவற்றிடம் தூதனுப்புகிருள் நாயகி. அவை விரைவாகத் தான் போகின்றன. ஆனாலும் இவளுடைய உள்ளத்தின் வேகத்தில் அந்தப் பறவைகளின் வேகம் எம்மாத்திரம்.

பையப் பையப்
போகின்ற புள்ளினங் காள்!

ஏ பறவைகளே. அந்தப் பக்கமாகப் போவதானல் தயவு செய்து,

சாகின்ற னள்என்று சொல்லீர்
அயன்றைச் சடையனுக்கே.

வேறு ஒன்றும் நீங்கள் சொல்லவேண்டாம். இங்கே ஒருத்தி செத்துக்கொண்டிருக்கிருள் என்று மட்டும் சொல்லுங்கள்.

மாகுன் றனையபொற் றேளான்
வழுதிமன் வான்கரும்பின்
பாகொன்று சொல்லியைப் பார்த்தென்னைப்
பார்த்திலன் பையப்பையப்

Koviloor Digital Library

போகின்ற புள்ளி னங்காள்
புழற்கோட்டம் புகுவதுண்டேல்
சாகின்ற னள்என்று சொல்லீர்
அயன்றைச் சடையனுக்கே.

பாகொன்று சொல்லி—பாகு ஒன்றிய (கலந்த) சொல்லையுடையவள். வழுதிமன் – பாண்டியன். புழற்கோட்டம் என்பது தொண்டைமண்டலத்தின் இருபத்து நாலு பிரிவுகளுள் ஒன்று. இன்றையச் சென்னையின் எழும்பூர் முதலிய பாகங்கள் இந்தப் புழற்கோட்டத்தைச் சேர்ந்தவை.

"பையப் பைய" என்று சொல்வதில் உணர்ச்சியின் சாயல் மிக நன்முக வந்திருக்கிறது!

"சாகின்றனள்" என்று கூறுவதில்தான், என்ன சோகம்!

Koviloor Digital Library

கலைமகள்

வறுமையால் வாடுகிற புலவனுக்கு ஒரு வேந்தன் அபாரமான செல்வந்தந்து மரியாதை செய்து-சரியாசனம் கொடுத்துப் பேசினுன் என்ருல் எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகும்!

"நாமோ சாதாரண நிலையிலுள்ள ஒரு மனிதன்; நம்மோடு உட்கார்ந்து பேசுகிறவனே இந்த உலகம் முழுவதற்கும் அரசன்" என்று எண்ணும்போது அவன் மனம் எவ்வளவு குதூகலம் அடைகிறது.

"இத்தனை பெருமையும் நமக்குத்தந்தது யார்? கலைமகள் அல்லவா?" மேற்கண்டவாறு அந்தப் புலவன் எண்ணுவது இயல்பு. சாதாரண மாக வாழ்க்கையில் மிக எளிய நிலையில் உள்ள ஒருவன்; அவனுக்குப் படிப்பில்லை; அவனுடைய மகன் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தான்; சிரமப் பட்டுப் படித்தான்; முன்னேறிவிட்டான். தகப்ப னுடைய 'யஜமான்' தகப்பனை நிறுத்திவைத்து வேலை வாங்குகிறுன். மகனுக்கோ 'ஸீட்' கொடுத்து அளவளாவுகிறுன்!

இந்த விஷயங்களையெல்லாம் மனசில் கொண்டு பார்த்தால்,

எக்குடி பிறப்பினும்
யாவரே ஆயினும்

Koviloor Digital Library

அக்குடி கற்றோரை
மேல்வருக என்பர்.

என்ற பாட்டின் பொருள் நமக்குப் புலப்படும்.

இனிக் காளமேகத்தின் பாட்டைப் பார்க்கும் போது அதன் உட்கிடையான உணர்ச்சிச் சாயல் நமக்கு இன்னதென்று தெரியும்.

வெள்ளைக் கலையுடுத்து
வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து
விற்றிருப்பாள் — வெள்ளை
அரியா சனத்தில்
அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த
தாய்.

வெள்ளை நிறத்தின் பரிசுத்தம் நிறைந்தவள் ஸரஸ்வதிதேவி. அவள் உடை, அலங்காரம், ஆசனம் எல்லாமே தூய வெண்ணிறம். இவ்வளவு பரிசுத்தமான அவளுடைய மனத்தில் எவ்வித பேதமும் கிடையாது. இவன் அரசன் இவன் ஆண்டி என்கிற வித்தியாசம் அவளுடைய ராஜ்யத்தில் இல்லை. எல்லாம் சரியாசனம்தான்!

Koviloor Digital Library

விஷயம என்னவென்ருல், கல்வி என்ற சிறப்பினுல் ஒரு மனிதன் மிக்க உயர்வு அடைகிருன் என்பதே. இதுவே ஸரஸ்வதியின் அருள். கலேகளே ஆராய்வதும் கவிதையை அனுபவிப்பதுமெல்லாம் இந்த அருளினுல்தான்.

ஸரஸ்வதியினுடைய அருள் இருந்துவிட்டால் கவிதை என்பது புரிந்துகொள்ளமட்டுமா எளிது! பாடுவதற்கே எளிதுதான்!

'ஸரஸ்வதி அந்தாதி' என்ற புனிதமான நூல் ஸரஸ்வதியின் அருள் இருந்தால் ஒரு கல்லும் கூடக் கவிசொல்லும் என்கிறது.

படிக நிறமும்
பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற்
கையும் — துடியிடையும்
அல்லும் பகலும்
அனவரத முந்துதித்தால்
கல்லும்சொல் லாதோ
கவி!

உண்மையான வார்த்தை!

கலேமகளின் அருள் வளருமாக!
